بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 7 & 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 ஷஃபான் 4- 11 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1403 தப்லீஃக் 15 - 22 ★15 - 22 பிப்ரவரி 2024


## அல்லாஹ்வின் கட்டளை

هُوَ الَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَہٗ بِالۡہُدٰی وَدِیۡنِ الۡحَقِّ لِیُظۡہِرَہٗ عَلَی الدِّیۡنِ کُلِّہٖ ۙ وَلَوۡ کَرِہَ الۡمُشۡرِکُوۡنَ ﴿۳۳﴾

**பொருள்**

அவனே தன்னுடைய தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் (ஏனைய) எல்லா சமயங்களின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். (இதை) இணை வைப்பாளர்கள் எவ்வளவு வெறுத்தாலும் சரியே. (9: 33)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# உமது அருட்களின் ஒளியை மீண்டும் வெளிப்படுத்துவதற்காக உம்மிடமிருந்தே மேலும் உமது சந்ததியிலிருந்தே ஒரு நபர் எழுப்பப்படுவார்

# ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய பரக்கத்துகளின் வெளிப்பாடு

## ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியின் மேற்கோள்கள்

உமது அருட்களின் ஒளியை மீண்டும் வெளிப்படுத்துவதற்காக உம்மிடமிருந்தே மற்றும் உமது சந்ததிகளிலிருந்தே ஒரு நபர் எழுப்பப்படுவார்; அவரிடத்தில் நான் பரிசுத்த ஆன்மாவின் அருட்களை ஊதுவேன்; அவரது உட்புறம் பரிசுத்தமானதாக இருக்கும். மேலும் அவர் இறைவனுடன் மிகவும் தூய தொடர்பு கொண்டவராகவும் இருப்பார். மேலும், அவர்

مَظۡهَرُ الۡحَقِّ وَالۡعَلَاء

என்பதன் வெளிப்பாடாக இருப்பார்.(அதாவது அவரிடமிருந்து உண்மையும், உயர்வும் வெளிப்படும்) இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று இருக்கும் என்று இறைவன் எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான்.

(தஹ்ஃபாயே கோல்டவியா,ரூஹானி கஸாயீன், தொகுதி 17, பக்கம் 181)

---

எனது சந்ததியிலிருந்தே ஒரு நபர் பிறப்பார்; அவருக்கு பல விஷயங்களில் மஸீஹுடன் ஒப்புமை இருக்கும். அவர் விண்ணிலிருந்து இறங்குவார்; மேலும், அவர் பூமியிலுள்ளவர்களின் வழியை சீராக்கி விடுவார். மேலும், அவர் கைதிகளுக்கு இரட்சிப்பு வழங்குவார். மேலும், சந்தேகங்கள் எனும் சங்கிலிகளில் கட்டப்பட்டிருப்பவர்களை விடுவித்து விடுவார் என்று இறைவன் ஓர் உறுதியான முன்னறிவிப்பில் என்னிடம் வெளிப்படுத்தி வைத்துள்ளான்.உமது நேசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவர் நற்பேறு கொண்டவர்.

مَظۡهَرُ الۡحَقِّ وَالۡعَلَاء كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَآءِ

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 3, பக்கம் 180)

---

நான் உமது ஜமாஅத்திற்காக உமது சந்ததியிலிருந்தே ஒரு நபரை எழுப்புவேன். மேலும், அவருக்கு எனது நெருக்கத்தையும், வஹீயின் மூலம் சிறப்பையும் வழங்குவேன். மேலும், அவர் மூலமாக உண்மை முன்னேற்றம் அடையும். மேலும், ஏராளமான மக்கள் உண்மையை ஒப்புக் கொள்வார்கள் என்று இறைவன் எனக்கு செய்தி வழங்கியுள்ளான்.

எனவே அந்த நாட்களுக்காக காத்திருங்கள். மேலும் நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள்! ஒவ்வொருவரும் அவருக்குரிய நேரத்தில் தான் இனங்கண்டு கொள்ளப்படுகின்றனர். மேலும், அந்த நேரத்திற்கு முன்பு அவர் ஒரு சாதாரண மனிதராக தென்படக் கூடும்; அல்லது சில ஏமாற்றும் எண்ணங்களின் காரணமாக அவர் ஆட்சேபனைக்குரியவராகவும் இருக்கலாம். முழுமையான மனிதனாக மாறவிருக்கும் ஒருவர் கூட அவர் பிறக்கும் முன்னே (தனது) தாயின் வயிற்றில் ஒரு விந்துத் துளியாகவோ அல்லது இரத்தக் கட்டியாகவோ இருப்பதைப் போன்று (இறைவன் புறமிருந்து வருபவர்களின் தோற்றமும் அவ்வாறே இருக்கின்றது).

( அல்வஸிய்யத், ரூஹானீ கஸாயின் தொகுதி 20, பக்கம் 306, அடிக்குறிப்பு )


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவமிக்க உயர் தகுதி அந்தஸ்து

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் பொலிவு மிக்க மகத்துவமான நற்செய்திக்கு ஏற்ப 1889-ம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி காலத்தின் இமாம், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் வீட்டில் பிறந்தார்கள். அன்னாருடைய கிலாஃபத் தொடர்பான முன்னறிவிப்புகள் நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன. வாக்களிக்கப்பட்ட மஸீஹுடைய ஒரு மகன் மிகவும் சிறப்பான மகத்துவமும், மேன்மையும் கொண்டவராக இருப்பார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட அன்னாரைக் குறித்து முன்னறிவிப்பு செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முந்தைய மற்றும் பிந்தைய சான்றோர்களின் அன்னாரைக் குறித்த முன்னறிவிப்புகளும் கிடைக்கின்றன. இந்த அனைத்து முன்னறிவிப்புகளையும் ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அந்த புதல்வர் நிச்சயமாக ஒரு சிறப்பு மிகு மகத்துவத்தையும் மேன்மையையும் கொண்டிருப்பார் என்பது தெரிய வருகின்றது. ஆயினும், அதனைக் குறித்த சரியான அனுமானம் மற்றும் அதன் விளக்கத்தைக் குறித்த ஞானம் நமக்கு அல்லாஹ் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு வழங்கியுள்ள முன்னறிவிப்புகளிலிருந்து கிடைக்கின்றது. அது ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு என்ற பெயரால் அறியப்படுகின்றது. முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பில் ஐம்பதுக்கும் அதிகமான அன்னாருடைய பண்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், இதயமும், சிந்தனையும் சிறப்பான தாக்கத்திற்கு உள்ளாகின்ற ஒரு விஷயம் என்னவென்றால் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَاۗءِ

அதாவது அன்னாரின் வருகை இறைவன் விண்ணிலிருந்து இறங்கி வருவதைப் போன்றதே ஆகும். இந்த வாசகம் அல்லாஹ்வின் மகத்துவ மிக்க உதவி மற்றும் ஒத்தாசையின் பக்கம் சுட்டி காட்டுகின்றது. இந்த இடம் சற்று நின்று ஆழ்ந்து சிந்திப்பதற்கு தகுந்ததாகும். அதாவது, எந்த மனிதரின் வருகையை அல்லாஹ் தனது வருகையாக குறிப்பிடுகின்றானோ அந்த நபர் எத்தகைய உயர் தகுதியையும், அந்தஸ்தையும் கொண்டவராக இருப்பார் என்பது சிந்திக்கத் தக்கதாகும். சந்தேகத்திற்கு இடமின்றி அன்னாரின் இருப்பு ஒன்றும் சாதாரண இருப்பாக இருக்கவில்லை. அன்னாரின் வாழ்க்கை ஒன்றும் சாதாரண வாழ்க்கையாக இருக்கவில்லை. மாறாக, அன்னாரின் இருப்பு என்பது ஆதமின் சந்ததிகளில் நூற்றாண்டுகளில் தோன்றுகின்ற இன்னும் கூறப்போனால் ஆயிரக்கணக்கான வருடங்களில் எப்போதாவது ஒருமுறை மனித குலத்தின் வானத்தில் தோன்றுகின்ற இருப்பாகும். அந்த நபரின் ஒளியானது ஒரு தலைமுறையை மட்டும் அல்லாமல் நூற்றுக்கணக்கான தலைமுறைகளை தமது ஒளிகளால் ஒளிமயமாக்குகின்றது.

கம்பீரமும் மகத்துவமும் மிக்க அல்லாஹ்வின் புறமிருந்து

كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَاۗءِ

என்று அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ள பாராட்டு என்பது எவ்வளவு வலிமையானது என்றால், அதனை விட பாராட்டு சாத்தியமற்றதாகும். மேலும், இது அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள எத்தகைய பட்டமும், பட்டயமும் என்றால் இதிலிருந்து அன்னார் (ரலி) மிகவும் மகத்துவ மிக்கவர்கள் என்பதற்கான தகவல் கிடைக்கின்றது. அன்னார் (ரலி) 52 வருடங்கள் வரை கிலாஃபத் அரியணையில் அமர்ந்திருந்தார்கள். இந்த காலகட்டத்தில் அன்னார் (ரலி) இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு எப்படிப்பட்ட தொண்டுகள் ஆற்றினார்கள் என்றால் மேலும், எப்படிப்பட்ட சிறப்பான பணிகளை மேற்கொண்டிருந்தார்கள் என்றால், அது முற்றிலும் ஒரு நபியினுடைய சிறப்பம்சம் ஆகும். அல்லாஹ் அன்னாருக்கு நபி என்ற பெயரை சூட்டவில்லையென்றாலும் அன்னாரிடமிருந்து அல்லாஹ் நபிமார்களுடைய பணிகளை வாங்கினான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் இறைவன் புறமிருந்து (நபியாக) அனுப்பப்பட்டவன் இல்லையென்றாலும் எனது குரல் இறைவனின் குரல் ஆகும். எனது அந்தஸ்து என்பது கிலாஃபத் மற்றும் மாமூரியத்திற்கு இடைப்பட்ட அந்தஸ்தைக் கொண்டதாகும்.

1936-ம் ஆண்டு அன்னார் (ரலி) மஜ்லிஸே ஷூஃவ்ரா கூட்டத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

ஒரு கிலாஃபத் இப்படிப்பட்டதாக இருக்கின்றது. அதாவது, அதில் அல்லாஹ் மக்களில் இருந்து கலீஃபாவை தேர்ந்தெடுக்கச் செய்கின்றான். பின்னர் அவரை ஒப்புக் கொண்டு விடுகின்றான். ஆனால், (எனது இந்த கிலாஃபத்) அப்படிப்பட்ட கிலாஃபத் இல்லை. அதாவது, ஹஸ்ரத் முதலாவது கலீஃபா (ரலி) அவர்களின் மரணத்திற்கு இரண்டாம் நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்கள் ஒன்று கூடி எனது கிலாஃபத்தில் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனால் மட்டும் நான் கலீஃபா இல்லை.மாறாக, ஹஸ்ரத் முதலாவது கலீஃபா (ரலி) அவர்களின் மரணத்திற்கு முன்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் இல்ஹாமின் மூலமாக, நான் கலீஃபாவாக இருப்பேன் என்று கூறியிருந்ததாலும் நான் கலீஃபா ஆவேன். ஆக, நான் கலீஃபா (மட்டும்) இல்லை. மாறாக, நான் வாக்களிக்கப்பட்ட கலீஃபா ஆவேன். நான் இறைவனால் (நபியாக) அனுப்பப்பட்டவன் இல்லை என்றாலும், எனது குரல் இறைவனின் குரல் ஆகும். இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக இந்த செய்தியை வழங்கியிருந்தான். ஆக இந்த கிலாஃபத்தின் அந்தஸ்து என்பது மாமூரியத் மற்றும் கிலாஃபத்திற்கு இடைப்பட்ட அந்தஸ்தைக் கொண்டதாகும்.

இந்த சந்தர்ப்பத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் வீணாக்கி விட்டு பின்னர் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் மீண்டும் மன்றாடுவதற்குரிய சந்தர்ப்பம் இதுவல்ல. நபியானவர் தினம், தினம் வருவதில்லை என்ற இந்த விஷயம் சரியானதாக இருப்பதைப் போன்று வாக்களிக்கப்பட்ட கலீஃபாவும் தினம் தினம் வருவதில்லை என்பதும் சரியானதாகும். ( ஃபஸ்லே உமர் வாழ்க்கை வரலாறு, தொகுதி 4, பக்கம் 508, வெளியீடு ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன்)

கீழே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் சில மேற்கோள்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்தைக் குறித்தும், அன்னாருடைய மகத்தான பணிகளைக் குறித்தும் அன்னாரின் ஆழிய ஞானங்களைக் குறித்தும், இறைத் தொடர்பைக் குறித்தும் தெரிய வருகின்றது: அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பிறகு முழு உலகத்திற்கும் சவால் விடுக்கின்றேன். அதாவது

இஸ்லாத்திற்கு எதிரில் தனது மார்க்கம் உண்மையானது ஆகும் என்ற நம்பிக்கை ஒருவருக்கு இருக்குமென்றால் பின்னர் அவர் (களத்திற்கு) வரட்டும்; மேலும் வந்து எம்முடன் போட்டியிடட்டும். இஸ்லாமே உயிருள்ள மார்க்கமாகும் என்ற விஷயம் அனுபவத்தின் மூலமாக எனக்கு நிரூபணமாகிவிட்டது. மேலும் வேறெந்த மார்க்கமும்

தொடர்ச்சி 10-ம் பக்கம்...

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ
பதர் வார இதழ் காதியான்
சிறப்பிதழ்
முஸ்லிஹ் மவ்வூத்

### இந்த இதழில்


| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 2 |
| 2 | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை 12.1.24 | 3 |
| 3 | முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஃபஸ்லே உமர் என்ற பெயர் ஏன் வைக்கப்பட்டது? | 11 |
| 4 | ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவம் | 14 |
| 5 | ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு வழிகாட்டல் | 16 |
| 6 | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை 22.12.23 | 17 |
| 7 | முஸ்லிஹ் மவ்வூத் தொடர்பான முன்னறிவிப்பு | 20 |

# ஜுமுஆ பேருரை

**உஹது போரின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை மற்றும் பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களின் நிலைகளும் உலகப் போரிலிருந்து தப்பிப்பதற்காக துஆவிற்கான அறிவுரையும்**

எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகத்திற்கு அருகில் இருந்தாரோ அவர் போரில் எல்லாரையும் விட பெரும் வீரராக கருதப்பட்டு வந்தார். ஏனெனில், அன்னார் (ஸல்) போர் மைதானத்தில் மிகவும் அபாயகரமான இடத்தில் இருந்தார்கள். ஸுப்ஹானல்லாஹ்! என்ன ஒரு மகிமை ! -(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

உஹது போர் நாளன்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தினரிடம் இருந்து மரணத்திற்கான பைஅத்தை வாங்கினார்கள். வெளிப்படையில் முஸ்லிம்களுக்கு பின்னடைவு ஏற்பட்டபோது அவர்கள் உறுதிப்பாட்டுடன் இருந்தனர்.மேலும் ஸஹாபா பெருமக்கள் தங்களது உயிருடன் விளையாடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். எந்த அளவிற்கு என்றால், அவர்களில் சிலர் ஷஹீதாகி விட்டனர்.

எந்த ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்றுகூடியிருந்தனரோ அவர்கள் உயிர் தியாகங்களை வெளிப்படுத்தினர். வரலாற்றில் அதற்கு நிகரான சம்பவங்களை காண முடியாது. இந்த மக்கள் விட்டில் பூச்சிகளைப் போன்று அன்னாரைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தனர். மேலும், அன்னாருக்காக தங்களது உயிருடன் விளையாடிக் கொண்டிருந்தனர். அன்னார் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை தங்கள் மீது வாங்கிக் கொண்டனர்.மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்து வந்தனர். அத்துடன் எதிரியின் மீதும் தாக்குதல் தொடுத்து வந்தனர்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஜனவரி 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **12ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அடிப்படையில் (விஷயங்கள்) கூறப்பட்டுக் கொண்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொண்டு கூறப்படும் விளக்கங்களில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா மக்களிலும் எதிரிக்கு மிக அதிகமாக அருகில் இருந்தார்கள். அன்னாருடன் 15 நபர்கள் உறுதியாக நின்று கொண்டிருந்தார்கள். முஹாஜிர்களில் எட்டு ஸஹாபிகள் இருந்தனர். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃப் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வகாஸ் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதான் பின் ஜர்ராஹ் (ரலி) ஆகியோர் ஆவர். ஏழு அன்ஸார் ஸஹாபிகளில் ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி), அபூ துஜானா(ரலி), ஆஸிம் பின் ஸாபித் (ரலி),ஹாரிஸா பின் ஸிமா(ரலி), ஸஹல் பின் ஹனீஃப் (ரலி), மற்றும் ஸஅது பின் முஆஸ் (ரலி) ஆகியோர் ஆவர். ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களும், முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களும் இருந்தார்கள் என்று சிலர் கூறியுள்ளனர். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் 30 நபர்கள் உறுதியாக நிலைநின்றார்கள் என்றும், மேலும் எனது முகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன்னால் இருக்க வேண்டும்; மேலும், எனது உயிர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிருக்கு முன்னால் இருக்க வேண்டும்; மேலும் அன்னார் (ஸல்) பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் (அவர்கள்) அனைவரும் கூறிக் கொண்டிருந்தனர் என சிலர் கூறியுள்ளனர். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 196- 197, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தியாகம் செய்ய வேண்டும்; அன்னார் (ஸல்) பாதுகாப்பாக இருக்க வேண்டும்; தங்களது உயிர் அர்ப்பணமாக வேண்டும் என்பது அவர்கள் அனைவரின் கூற்றாக இருந்தது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் 11 நபர்களும், தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களும் எஞ்சியிருந்தனர். ஓர் அறிவிப்பில் வருகின்றது: இணை வைப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுற்றி வளைத்தபோது, அன்னார் (ஸல்) 17 அன்ஸார் ஸஹாபிகளுக்கும்,ஒரு குறைஷிய ஸஹாபிக்கும் மத்தியில் இருந்தார்கள்.

இதேபோன்று மற்றோர் அறிவிப்பில் வருகின்றது: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் 9 நபர்களுக்கிடையில் தனியாக ஆகிவிட்டார்கள். அன்ஸார் ஸஹாபிகளில் ஏழு நபர்களும், குறைஷிகளில் இருவரும் மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்தாவது நபராகவும் இருந்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 196- 197, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதியாக நிலை நின்ற ஸஹாபிகளின் எண்ணிக்கை பல்வேறு அறிவிப்புகளில் பலதரப்பட்டதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (நமது ஜமாஅத்தின்) ரிஸர்ச் செல் (அதாவது ஆய்வுக் குழு) தனது குறிப்புகளை தந்துள்ளது. அதில் அவர்கள் கூறுகின்றனர்: அதாவது, முப்பது நபர்களைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. அதற்கு ஒரு காரணம் இதுவாக இருக்கக் கூடும். அதாவது, ஸஹாபிகளின் எண்ணிக்கை அந்தநேரத்தின் அடிப்படையில் மாறிக் கொண்டிருந்திருக்கும். எவர் 15 பேர்களை கண்டாரோ அவர் பதினைந்து என்று கூறிவிட்டார். எவர் எத்தனை நபர்களைக் கண்டாரோ அதனை அவர் எடுத்துரைத்து விட்டார். ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து சென்று கொண்டிருந்திருப்பர். அதன் காரணமாக எண்ணிக்கையில் வேறுபாடு ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

எவ்வாறு இருப்பினும், இதுவே சரியானதாக தெரிகின்றது. ஸஹாபிகள் அன்னாரைச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். பின்னர் எதிரியின் தாக்குதலால் குழுவினர் பிரிந்தனர்; சிதறுண்டனர். பின்னர் மீண்டும் ஒன்று கூடி வந்தனர் என்று கடந்த குத்பாக்களில் முன்னர் இந்த விளக்கம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், விஷயம் இதுவே ஆகும். அதாவது ஸஹாபிகள் உறுதிப்பாட்டிற்கான முன்மாதிரிகளைக் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். மேலும், நாம் மரணித்து விடுவோம் என்ற எவ்வகையான அச்சமும் அவர்களில் எவருக்கும் இருக்கவில்லை. இந்த குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் உஹது போர் நாளன்று தமது ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தினரிடம் மரணத்திற்கான உடன்படிக்கை வாங்கியிருந்தார்கள்.

ஆக, வெளிப்படையில் முஸ்லிம்களுக்கு பின்னடைவு ஏற்பட்டபோது, அவர்கள் உறுதிப்பாட்டுடன் இருந்தனர். மேலும், தங்களது உயிருடன் விளையாடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்து வந்தனர். எந்த அளவுக்கு என்றால், அவர்களில் சிலர் ஷஹீது ஆகிவிட்டனர்.

அந்த நாளில் எட்டு நபர்கள் அன்னாருடைய தூய கரங்களில் மரணத்திற்கான பைஅத் செய்தனர். அந்த

பைஅத் செய்யக் கூடிய நற்பேறு பெற்றவர்களின் பெயர்கள் அறிவிப்புகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவை இவையாகும்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள்,ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூதுஜானா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸிம்மா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள், மற்றும் ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) ஆகியோர் ஆவர். இவர்களில் எவரும் ஷஹீதாகவில்லை. (அஸாபா, பாகம் 3, பக்கம் 431, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1905 பதிப்பு)

அல்லாமா ஸீமக்ஷரியின் கஸாயிஸ் அஷரஃ என்ற நூலில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். மேலும், அன்னார் அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மரணத்திற்கான பைஅத் செய்திருந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாக்கும் பொருட்டு உயிரைக் கொடுத்து விடுவோம்; எனினும் அன்னாரை விட்டு விட மாட்டோம் என்று அவர்கள் பைஅத் செய்தனர். (அஸ்ஸீரத்லுல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 321, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸஹாபிகளின் உறுதிப்பாடு மற்றும் உயிர்த் தியாகம் ஆகியவற்றைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்றுகூடியிருந்த ஸஹாபிகள் வெளிப்படுத்திய உயிர் தியாகங்களுக்கான முன்மாதிரியை வரலாற்றிலிருந்து காட்ட முடியாது. இந்த மக்கள் விட்டில் பூச்சிகளைப் போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தனர். மேலும், அன்னாருக்காக தங்களது உயிருடன் விளையாடிக் கொண்டிருந்தனர். நிகழ்ந்த அனைத்து தாக்குதல்களையும் ஸஹாபிகள் தங்கள் மீது வாங்கிக் கொண்டனர். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாதுகாத்து வந்தனர். மேலும், அத்துடன் எதிரியும் தாக்குதல் நடத்திக் கொண்டே சென்று கொண்டிருந்தான். ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 495)

அன்னார் (ரலி) மேற்கொண்டு எழுதுகின்றார்கள்: ஒவ்வொரு கணமும் பலம் மிக்க அலைகளைப் போன்று நாலாப்புறமும் அதிகரித்துக் கொண்டே சென்று கொண்டிருந்த அந்த பெரு வெள்ளத்திற்கு முன்னால் உயிரையும் அர்ப்பணிப்பதற்கு தயாராக இருந்த இந்த சில குறுகிய ஸஹாபிகளால் எப்போது வரைதான் எதிர் கொள்ள முடியும்! எதிரியின் ஒவ்வொரு தாக்குதலின் ஒவ்வோர் அலையும் முஸ்லிம்களை எங்கிருந்து எங்கோ கொண்டு சென்று கொண்டிருந்தது. ஆனால், வேகம் சற்று தணிந்தபோது அப்பாவி முஸ்லிம்கள் போரிடுவார்கள்; மோதுவார்கள்; பின்னர் மீண்டும் தமது அன்பிற்குரிய எஜமானரைச் சுற்றி ஒன்று கூடிவிடுவார்கள். சிலவேளையோ எப்படிப்பட்ட அபாயகரமான தாக்குதல் நடைபெற்று வந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படையில் தன்னந்தனியாக இருந்து வந்தார்கள்.

ஆக, ஒரு நேரம் எப்படிப்பட்டதாக வந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி 12 நபர்கள் மட்டுமே இருந்தனர். மேலும், மற்றொரு சமயம் எப்படிப்பட்டதாக வந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இரண்டு நபர்களே இருந்தனர். உயிர் தியாகத்திற்கு தயாராக இருந்த அந்த ஸஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் அலீ(ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் பின் வகாஸ் (ரலி), அபூதுஜானா (ரலி), ஸஅத் பின் முஆஸ் (ரலி) மற்றும் தல்ஹா அன்ஸாரி (ரலி) ஆகியோரின் பெயர்கள் குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 495-496) இந்த அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி இருந்த ஸஹாபிகளைக் குறித்து பல்வேறு அறிவிப்புகளில் வருகின்ற எண்ணிக்கை தெளிவாகிவிடுகின்றது. நான் கூறியதுபோன்று தாக்குதலின் காரணமாக சிலநேரம் எண்ணிக்கை குறைவாக இருந்தது; சிலநேரம் அதிகமாக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கிறிஸ்தவர்கள் செய்கின்ற ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்னார் (ஸல்) பொய் சொல்வதையும், தவறான கூற்றுகளை கூறுவதையும் ஆகுமானதாக ஆக்கியிருந்தார்கள் என்று கிறிஸ்தவர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நமது தலைவரும், எஜமானரும் மற்றும் பரிசுத்த நபியுமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைக்கான ஓர் உயர் முன்மாதிரி இந்த இடத்தில் நிரூபணமாகியுள்ளது. அது இதுவாகும். அதாவது, எந்த தவ்ரியாவை ஆகுமானதாகக் கருதிக் கொண்டு உங்களது இயேசு வாழ்நாள் முழுவதும் பயன்படுத்திக் கொண்டிருந்தாரோ அந்த விஷயத்தை விட்டு முடிந்த வரை விலகியிருப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை வழங்கினார்கள். தவ்ரியா என்பதன் அகராதி பொருள் இதுவாகும். அதாவது, நாவால் ஒன்றை உரைப்பது; உள்ளத்தில் வேறொன்று இருப்பது. அதாவது, இரண்டு பொருள்படும் விஷயங்களை பேசுவது ஆகும்.

இதனை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தவ்ரியா என்ற சொல்லின் பொருளை மேற்கொண்டு விளக்கத்துடன் எடுத்துரைத்துள்ளார்கள்: அகராதிப் பொருளோ ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

அன்னார் (அலை) இவ்வாறு விளக்கமளித்துள்ளார்கள்: அதாவது, குழப்பமான நேரத்தில் அச்சத்தால் ஒரு விஷயத்தை மூடி மறைப்பதற்கு ஒரு நோக்கத்துடனோ அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலோ நுட்பத்தைக் கையாண்டு உரையாடுவது ஆகும். அதாவது உவமைகளை எடுத்துக் கூறி ஓர் இரகசியமான விஷயத்தை மறைப்பதற்காக எவ்வாறான கோணத்தில் எடுத்துரைப்பது என்றால், அறிவார்ந்த மக்கள் அந்த விஷயத்தை புரிந்து கொள்கின்ற அதேநேரம் அறிவிலிகளால் புரிய முடியாதபடி இருப்பது ஆகும். அதாவது எவ்வாறு உரையாட வேண்டும் என்றால் பொய்யாகவும் இருக்கக் கூடாது; அதற்கு பல பொருள்களும் இருக்க வேண்டும். அறிவுடையவர் புரிந்து கொள்ள வேண்டும்; மூடரால் புரிய முடியாதபடி இருக்க வேண்டும். மேலும் அவரது சிந்தனை வேறொரு பக்கம் சென்று விட வேண்டும். தவ்ரியாவின் அகராதிப் பொருள் என்பது, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது உயரிய இறையச்சத்திற்கு எதிரானதாகும். உயரிய அந்தஸ்தைக் கொண்ட இறையச்சத்திற்கு எதிரானது என்று ஹதீஸ்களில் இருந்தும் நிரூபணம் ஆகியுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இதைக் குறித்து வெளிப்படையாக கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இதனை ஒருபோதும் எதிர்பார்க்க இயலாது. ஆனால், கிறிஸ்தவர்களைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறிய கருத்தின் சுருக்கம் என்னவென்றால், கிறிஸ்தவர்களைப் பொருத்த வரை அவர்கள் எந்த நபரை இறைவன் என்று நம்புகின்றனரோ அவருடைய நிலை எவ்வாறானதாக இருக்கின்றது என்றால் அவர் சின்னச் சின்ன விஷயங்களுக்கு கூட தவறான கூற்றைப் பேசியிருக்கின்றார்; இதைக் குறித்து அன்னார் (அலை) கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பொருத்த வரை இயன்ற வரை இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டுள்ளார்கள். அதன் மூலமாக பொருளின் அடிப்படையில் வெளிப்படையிலான முறையிலும் பொய்யை ஒத்திருக்கக் கூடாது என்றும் கூறினார்கள். ஆனால், உங்களுடைய இயேசுவால் இந்த அளவுக்குக் கூட உண்மையை கடைபிடிக்க முடியவில்லையா என்ன? எவர் தன்னை இறைவன் என்று வாதிக்கின்றாரோ அவர் துணிவு கொண்ட சிங்கத்தைப் போன்று உலகிற்கு முன்னால் வந்திருக்க வேண்டாமா! அது அல்லாமல் வாழ்நாள் முழுவதும் இரு பொருள்களைக் கொண்ட சொற்களை கையாண்டு அனைத்து கூற்றுகளும் பொய்யை ஒத்ததாகப் பேசியிருக்கின்றார். இதன் மூலம் மரணத்தைப் பொருட்படுத்தாத எதிரிகளுக்கு முன்னால் தம்மை வெளிப்படுத்த தயங்காத, இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ள முழுமையடைந்த மக்களை தாம் சார்ந்தவர் இல்லை என்பதை அவர் நிரூபத்துள்ளார். அதாவது, எவரை நீங்கள் இறைவன் என்று கூறுகின்றீர்களோ அவர் தமது முழு வாழ்நாளும் இரு பொருள்படும் பேச்சை பேசியிருக்கின்றார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பார்களோ அவர்கள் ஒருபோதும் கோழைத்தனத்தைக் காட்ட மாட்டார்கள் அல்லது இறைவனுடைய நபிமார்கள் கோழைத்தனத்தைக் வெளிப்படுத்துவதில்லை. பலவீனமான அறிவைக் கொண்ட இயேசு பலவீனமான நிலையில் இரு பொருள்படும் ஒருவகையான பொய்யைக் கையாண்டுள்ளார் என்று அவரைக் குறித்து எவராவது ஆட்சேபனை செய்தால் அதற்கு நாம் என்ன பதில் கூறுவது? என்று நினைத்து

நமக்கு அழுகை வருகின்றது. தூதர்களின் தலைவராகிய ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் உஹது போரில் தனியாக இருந்தபோதிலும் உருவிய வாள்களுக்கு முன்னால் நான் முஹம்மது (ஸல்) ஆவேன்; அல்லாஹ்வின் நபியாவேன்; அப்துல் முத்தலிபுடைய பேரன் ஆவேன் என்று கூறிக் கொண்டே இருந்தார்கள். மற்றொரு பக்கம் பார்க்கும்போது, உங்களுடைய இயேசு அஞ்சி நடுங்கியவாறு தம்முடைய சீடர்களைப் பார்த்து உண்மைக்கு புறம்பான போதனையைக் கொடுக்கின்றார். நான் இயேசு என்பதை யாரிடமும் கூறிவிடாதீர்கள் என்று கூறுகின்றார். இதைக் கண்டு எமக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்படுகின்றது. இறைவா! உன் வழியில் எந்த நபருடைய துணிவு இவ்வாறானதாக இருக்கின்றதோ அவரும் நபியென்று அழைக்கபடுகின்றாரே! என நினைத்து எமக்கு மிகுந்த வியப்பு ஏற்படுகின்றது. (நூருல் குர்ஆன், ரூஹானி கஸாயின், தொகுதிற 9, பக்கம் 405 -407)

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைக் குறித்து அன்னார் (அலை) இவ்வாறு ஆச்சரியத்தை வெளிப்படுத்தியது அவதூறுகளுக்கு பதில் அளிக்கும் விதமாக இருந்ததேயொழிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நபியல்ல என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கருதினார்கள் என்பதன்று. அன்னார் (அலை) அவ்வாறு பொருள் கொள்ளவில்லை. மாறாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீங்கள் எந்த நபியை முன்னிறுத்துகின்றீர்களோ மேலும் எவரை நீங்கள் இறை மகன் என்று கூறுகின்றீர்களோ அவருடைய நிலையோ உங்களுடைய வேதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது இவ்வாறானதாக உள்ளது. அவ்வாறிருந்தும் கூட நீங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்தவாறு பொய் பேசுவதையும், கோழைத்தனத்தை வெளிப்படுத்துவதையும் அன்னார் (ஸல்) ஆகுமானதாக ஆக்கியுள்ளார்கள் என்று கூறுகின்றீர்களே? என்று அன்னார் (அலை) கேட்டார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதுகின்றார்கள்: காஃபிர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை சுற்றி வளைத்தபோது அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள்.

مَنْ رَجُلٌ يَشْرِي لَنَا نَفْسَهُ

அதாவது எவர் நமக்காக தம்மை விற்பதற்கு ஆயத்தமாக உள்ளார்? என்று கேட்டார்கள். அப்போது ஸியாத் பின் ஸகன் என்ற அன்ஸாரி ஸஹாபி ஐந்து அன்ஸாரி நபர்களுடன் வந்து நின்றார்கள். சிலரைப் பொருத்தவரை அவர் அம்மாரா பின் ஸகன் ஆவார் என்று கூறுகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் வீரத்துடன் போரிட்டவாறு ஒவ்வொருவராக ஷஹீது ஆகிப்போனார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களில் இறுதியானவராக ஸியாத் அல்லது அம்மாரா இருந்தார்கள். அவர்கள் போரிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு பல காயங்கள் ஏற்பட்டன. பிறகு முஸ்லிம்களுடைய ஒரு குழு அங்கு திரும்பி வந்தது. அந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட்டு இணை வைப்பாளர்களை விரட்டியடித்தனர். அதன் பிறகு ஹஸ்ரத் ஸியாத் பின் ஸகன் (ரலி) அவர்களை என்னிடம் கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அன்னார் (ரலி) கொண்டு வரப்பட்டார்கள். அன்னார் (ரலி) தமது இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருந்தார்கள். அன்னாரை மேலும் அருகில் கொண்டு வருமாறு அன்னார் (ஸல்) கூறியபோது, ஸஹாபிகள் அன்னாரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிக அருகில் கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய பாதத்தை அன்னாருக்கு அருகில் கொண்டு சென்றார்கள். அன்னார் (ரலி) தமது முகத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பாதத்தில் வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களின் முகம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பாதத்தில் இருந்த நிலையிலேயே அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. அன்னாரின் உடலில் 14 காயங்கள் இருந்தன.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: ஒரு சந்தர்ப்பத்தில் குறைஷிகளுடைய தாக்குதலின் அசாதாரணமான ஓர் அலை இருந்தது. அப்போது, இறைவழியில் தற்போது தமது உயிரை தியாகம் செய்யக் கூடியவர் யாராவது இருக்கின்றாரா? என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஓர் அன்ஸாரி ஸஹாபியின் காதில் இந்தக் குரல் விழுந்தபோது, அன்னாரும் இன்னும் 6 அன்ஸாரி ஸஹாபிகளும் பித்துப் பிடித்தவர்களைப் போன்று முன்னால் வந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் அன்னாரைச் சுற்றி போரிட்டவாறு உயிரை கொடுத்து விட்டார்கள். அந்தக் குழுவின் தலைவராக ஹஸ்ரத் ஸியாத் பின் ஸகன் (ரலி) அவர்கள் இருந்தார்கள். காஃபிர்களின் மிக வலுவான தாக்குதலாக அது இருந்தது. அது சற்று தணிந்தபோது மற்ற ஸஹாபிகள் வந்தடைந்து விட்டனர். அது கொஞ்சம் காலியானபோது, ஸியாதை தமக்கு அருகில் தூக்கிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். மக்கள் அன்னாரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் தூக்கிக் கொண்டு வந்து விட்டனர். அன்னாரிடத்தில் சற்று உயிர் இருந்தது. அன்னாரின் உயிர் பிரிந்து கொண்டிருந்தது. அப்போது, அன்னார் (ரலி) பெரும் முயற்சி செய்து தமது முகத்தை உயர்த்தி தூக்கிக் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் வைத்து விட்டார்கள். அந்த நிலையிலேயே அன்னார் உயிரை விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களுடைய ஷஹாதத் சம்பவம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். போரிட்டவாறே அன்னார் ஷஹீதாகி விட்டார்கள். இப்னு கமீய்யா என்பவன் அன்னாரை ஷஹீதாக்கி விட்டான். வரலாற்றில் இவ்வாறு வருகின்றது: உஹது போரில் கொடியைப் பிடித்திருந்த முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் கொடியை பாதுகாப்பதன் உரிமையை நன்கு நிறைவேற்றினார்கள். உஹதுப் போர் நாளன்று முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் கொடியை உயர்த்திப் பிடித்திருந்தார்கள். இப்னு கமீய்யா என்பவன் குதிரையில் வந்து தாக்குதல் தொடுத்தான். முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் வலது கையால் கொடியைப் பிடித்திருந்தார்கள். அவன் வலது கரத்தை வெட்டி விட்டான். அன்னார் (ரலி) இடது கரத்தால் கொடியைப் பிடித்தார்கள். அவன் இடது கையையும் வெட்டி வீழ்த்தி விட்டான். அப்போது அன்னார் (ரலி) வெட்டப்பட்ட இரு கைகளால் இஸ்லாமியக் கொடியை தமது நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். அதன் பிறகு இப்னு கமீய்யா மூன்றாவது முறையாக ஈட்டியைக் கொண்டு அன்னாரை தாக்கினான். அதனை அவன் முஸ்அப் (ரலி) அவர்களின் நெஞ்சில் இறக்கிவிட்டான். அப்போது அந்த ஈட்டி உடைந்து விட்டது. மேலும் கீழே விழுந்து விட்டார்கள். அப்போது பனூ அப்துத்தார் கோத்திரத்தைச் சேர்ந்த ஸுவைபித் பின் ஸஅதே பின் ஹர்மலா (ரலி) மற்றும் அபூ ரூம் பின் உமைர் என்ற இரு நபர்கள் முன்னால் வந்தார்கள். அபூ ரூம் பின் உமைர் (ரலி) அவர்கள் அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். அது அன்னாருடைய கைகளில் தான் இருந்தது. எந்த அளவிற்கு என்றால், முஸ்லிம்கள் மதீனாவிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். மேலும் மதீனாவில் நுழைந்து விட்டனர். (அத்தப்காத்துல் குப்ரா, பாகம் 3, பக்கம் 89- பதிப்பு தாருல் குதுவில் இல்மியா பெய்ரூத்)

இது ஒரு வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் வழங்கியதாக மற்ற சில அறிவிப்புகளில் வருகின்றது.

இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: குறைஷியர்களின் படை ஏறக்குறைய நாலாப்புறமும் சுற்றி வளைத்து விட்டது. தமது தொடர் தாக்குதல்களால் ஒவ்வொரு தருணமும் முஸ்லிம்களை நசுக்கிக் கொண்டே வந்தது. அந்நிலையிலும் கூட முஸ்லிம்கள் சற்று நேரத்திற்கு பிறகு சீரடைந்து விடுவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால், மிக மோசமான நிலையை ஏற்படுத்திய விஷயம் என்னவென்றால் அப்துல்லாஹ் பின் கமீய்யா என்ற ஒரு குறைஷிய வீரன் முஸ்லிம்களின் கொடியை பிடித்திருந்த ஹஸ்ரத முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் மீது தாக்குதல் தொடுத்து தமது வாளல் முஸ்அப் (ரலி)அவர்களுடைய வலது கரத்தை வெட்டி விட்டான். முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் உடனடியாக தமது மற்றொரு கரத்தால் கொடியை பிடித்தவாறு இப்னு கமீய்யாவை எதிர்கொள்வதற்கு முன்னேறிச் சென்றார்கள். ஆனால், அவன் மறுபடியும் தாக்குதல் நடத்தி மற்றொரு கரத்தையும் வெட்டி வீழ்த்தி விட்டான். அப்போது ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள் தமது இரு கரங்களையும் ஒன்று சேர்த்து கீழே விழுந்த இஸ்லாமியக் கொடியை தாங்கிப் பிடிக்க முயற்சி செய்தவாறு அதனை தமது நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். அப்போது, இப்னு கமீய்யா மூன்றாவது முறையாக தாக்குதல் நடத்தினான். இப்போது முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள். இந்தக் கொடியை மற்றொரு முஸ்லிம் உடனடியாக பிடித்துக்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கொண்டார். முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களுடைய தோற்றம் மற்றும் நடவடிக்கை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஒப்புமை கொண்டிருந்ததன் காரணமாக தான் முஹம்மது (ஸல்) அவர்களை கொன்று விட்டதாக இப்னு கமீய்யா எண்ணிக் கொண்டான். அல்லது விஷமத்தனத்தின் காரணமாகவோ அல்லது ஏமாற்றும் நோக்கிலோ அவன் புறமிருந்தும் இது செய்யப்பட்டிருப்பதற்கும் சாத்தியம் இருந்தது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஷஹீதாகி கீழே விழுந்ததைக் கண்டு தான் முஹம்மது (ஸல்) அவர்களை கொன்று விட்டதாக கூச்சலிட அவன் ஆரம்பித்தான். இந்த செய்தியால் முஸ்லிம்களிடம் இருந்த சிறிதளவு துணிச்சலும் போய்விட்டது. முஸ்லிம்களுடைய ஒற்றுமை முற்றிலும் சிதறுண்டு போய்விட்டது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று, உஹதுப் போரில் முஸ்லிம்கள் சில நொடிகள் கவனமின்மையுடன் செயல்பட்டதன் காரணமாக இஸ்லாத்தின் வெற்றி தற்காலிக தோல்வியாக மாறிப்போனது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் மிகச் சிறந்த தளபதியாக திகழ்ந்தார்கள் என்பதும் ஞானத்துடன் உடனடியாக முடிவெடுப்பதில் எஜமானராக திகழ்ந்தார்கள் என்பதும் உலக வரலாற்றில் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் ஆகும். போரின் நிலை மாறுவதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆழமான கண்ணோட்டத்தில் பார்த்தார்கள். நான்கு மடங்கு அதிகமாக இருந்த எதிரிக்கு முன்னால் சிதறுண்டு போன தமது படையை அன்னார் (ஸல்) எப்படி பாதுகாத்தார்கள் என்றால், எதிரி இஸ்லாமியப் படையை நசுக்கி விடுவதற்காக தீய எண்ணம் கொண்டு செயல்பட முற்பட்டான். அதில் அவனால் வெற்றி பெற முடியவில்லை. ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்கு பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாமியக் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் வழங்கினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி)அவர்கள் இஸ்லாமியக் கொடியை கையில் வாங்கினார்கள். வெற்றி மயக்கத்தில் இருந்த எதிரிக்கு முன்னால் அன்னார் (ரலி) உறுதியாக நின்று விட்டார்கள். அன்னாரின் வாள் எதிரியை வெட்டி வீழ்த்திக் கொண்டே சென்றது. அத்துடன் சிதறுண்டு போயிருந்த இஸ்லாமியப் படையின் துணிவை சீர்படுத்திக் கொண்டே சென்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சுற்றியிருந்த சில நபர்களைக் கொண்டு அந்த இஸ்லாமியப் படையுடன் சேர்ந்து கொண்டு எந்த அளவு வீரமாக போர் புரிந்தார்கள் என்றால் இணை வைப்பாளர்களுடைய பெரும் திரளிலிருந்து வெளியேறுவதற்கு வழி கிடைத்து விட்டது. ஆகவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தலைமையில் இந்த சிறிய எண்ணிக்கை கொண்ட கூட்டம் பாதையை உருவாக்கி விட்டது. போர்க் களத்தில் சிதறுண்டு போயிருந்த அந்த இஸ்லாமியப் படையை நோக்கி அது முன்னேறியது. முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷஹாதத் செய்தியைக் கேட்டு தைரியம் இழந்து கொண்டிருந்தார்கள். எனவே, மக்கத்து இணை வைப்பாளர்களின் படையும், இஸ்லாமியப் படை மீண்டும் எழுந்து விடக் கூடாது என்று முழுவதுமாக தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால், பின்வாங்க வேண்டும் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஞானம் எந்த அளவிற்கு வெற்றிகரமாக இருந்தது என்றால், கையளவு இருந்த அந்த இஸ்லாமியப் படை தோளோடு தோள் சேர்த்தவாறு எதிரிகளுடைய தாக்குதல்களை முறியடித்தவாறு அவர்கள் அறியாத வண்ணம் பள்ளத்தாக்கின் பக்கம் நழுவி விட்டது. சுற்றி வளைப்பதற்காக எதிரி முழு ஆற்றலையும் பயன்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்த படையை கிழித்தவாறு பாதையை உருவாக்கி விட்டார்கள்.

உஹதுப் போரில் போரிட்டுக் கொண்டிருந்த ஸஹாபிகளுக்கு லேசான உறக்கம் மற்றும் மயக்கம் தோன்றியதைக் குறித்து குறிப்பும் காணப்படுகின்றது: அல்லாஹ் எவ்வாறான சூழ்நிலையை உருவாக்கினான் என்றால், அவர்களுக்கு லேசான உறக்கம் வந்து விட்டது. இதைக் குறித்த விளக்கம் இவ்வாறு காணப்படுகின்றது. ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

போரின் சூழல் மாறியபோது நான் என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அருகில் இருக்கக் கண்டேன். நாங்கள் உணர்விழந்து அச்சத்தில் இருந்தபோது எங்கள் மீது லேசான உறக்கம் இறக்கப்பட்டது. அது எவ்வாறான நிலையாக இருந்தது என்றால் சிறியதொரு மயக்கமாக இருந்தது. லேசான உறக்கத்தின் காரணமாக தனது தலையை கீழே தொங்க விடாத எந்தவொரு நபரும் எங்களில் இருக்கவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எவ்வாறு தோன்றியது என்றால், முஅத்தப் பின் குஷைர் அவர்களின் குரல் கனவில் கேட்பதைப் போன்று இருந்தது. முடிவு எடுக்கக் கூடிய அதிகாரம் நமக்கு இருந்திருக்கும் என்றால் நாம் ஒருபோதும் இங்கு இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்க மாட்டோம் என்று அன்னார் (ரலி) கூறிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) அன்ஸாரி ஸஹாபி ஆவார்கள். பைஅத்தே உக்பாவிலும், பத்ர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) கூறிய சொற்றொடரை நான் மனனம் செய்து கொண்டேன். இந்த லேசான உறக்கத்தைக் குறித்து அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

ثُمَّ اَنۡزَلَ عَلَيۡكُمۡ مِّنۡۢ بَعۡدِ الۡغَمِّ اَمَنَةً نُّعَاسًا يَّغۡشٰى طَآٮِٕفَةً مِّنۡكُمۡ ۙ

وَطَآٮِٕفَةٌ قَدۡ اَهَمَّتۡهُمۡ اَنۡفُسُهُمۡ يَظُنُّوۡنَ بِاللّٰهِ غَيۡرَ الۡحَـقِّ ظَنَّ

الۡجَـاهِلِيَّةِ ‌ؕ يَقُوۡلُوۡنَ هَلۡ لَّنَا مِنَ الۡاَمۡرِ مِنۡ شَىۡءٍ ؕ قُلۡ اِنَّ الۡاَمۡرَ كُلَّهٗ لِلّٰهِ

பிறகு அவன் இத்தூக்கத்திற்கு பிறகு உங்களுக்கு மனஅமைதியை இறக்கினான். அதாவது லேசான உறக்கத்தை இறக்கினான். இது உங்களுள் ஒரு பிரிவினரை ஆட்கொண்டது. மற்றொரு பிரிவினர் தங்களைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்தனர். இவர்கள் அல்லாஹ்வைக் குறித்து அறிவீனமான யூகம் போன்று, உண்மையற்ற எண்ணங் கொண்டிருந்தனர். இவ்விஷயத்தில் எங்களுக்கும் ஏதேனும் கூறுவதற்கு உண்டா? எனக் கூறிவந்தனர். தீர்மானங்கள் எல்லாம் அல்லாஹ்விற்கே உரியன என்று கூறுங்கள். (3: 155)

ஹஸ்ரத் கஅப் பின் அம்ர் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹதுப் போரின் நாளில் நான் ஒரு சந்தர்ப்பத்தின்போது எனது சமுதாயத்தின் 14 நபர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தேன். அப்போது எங்களை லேசான உறக்கம் ஆட்கொண்டது. அது நிம்மதி அளிக்கக் கூடியதாக இருந்தது. அதாவது அது மிகவும் நிம்மதியான உறக்கமாக இருந்தது. போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால் எப்படிப்பட்ட லேசான உறக்கமாக இருந்தது என்றால் அது எங்களுக்கு நிம்மதியை வழங்கிக் கொண்டிருந்தது. நெஞ்சில் இருந்து ஊது குழலில் ஊதப்படுவதைப் போன்று குறட்டை சப்தம் வராத எந்தவொரு நபரும் எங்களில் இருக்கவில்லை. பிஷ்ர் பின் பராஃ பின் மஃரூர் (ரலி) அவர்களின் கைகளில் ஒரு வாள் இருந்தது. அது (கீழே) விழுந்து விட்டது. அது (கீழே) விழுந்த உணர்வு கூட இல்லாமல் இருந்ததை நான் கண்டேன். ஆனால், இணை வைப்பாளர்கள் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 310, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எழுதுகின்றார்கள்: வாள் கீழே விழுந்ததாக அவர்களுக்கு தோன்றியதற்கும் வாய்ப்பு உள்ளது. ஏனெனில், அப்போது எவ்வாறான சூழல் இருந்தது என்றால், தூக்கமோ இருக்கத்தான் செய்தது. ஆயினும் அவர்களின் கைகளில் ஆயுதங்கள் உறுதியாக இருந்தன. அவை கீழே விழ ஆரம்பிக்கும்போது ஓர் உதறல் எடுத்து விடும். நுஆஸன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனுடைய விளக்கம் என்னவென்றால், அமனத்தன் நுஆஸன் என்பதற்கு பல்வேறு மொழியாக்கங்களில் உள்ள விளக்கத்தின் சுருக்கம் என்னவென்றால், துக்கத்திற்கு பிறகு உங்கள் மீது எவ்வாறான நிம்மதி இறங்கியது என்றால் அதனை தூக்கம் என்று கூறலாம் அல்லது எவ்வாறான லேசான மயக்கம் வழங்கப்பட்டது என்றால் அது நிம்மதியைக் கொண்டதாக இருந்தது அல்லது தூக்கத்தைப் போன்ற தாக்கத்தைக் கொண்டிருந்த அது அல்லது தூக்கத்தைச் சார்ந்த அது நிம்மதியை வழங்கியது.

அமனத்தன் நுஆஸன் என்ற சொல்லின் பொருள் என்னவென்றால், தற்காலிகமான லேசான உறக்கத்திற்கு ஆட்பட்டு தலையை லேசாக கீழே சாய்த்து விடுவதைக் குறிக்கின்றது. ஆனால் இங்கு நுஆஸன் என்ற சொல்லின் பொருள் அது போன்ற லேசான உறக்கம் கிடையாது. மாறாக அது எவ்வாறான நிலை என்றால் விழித்திருக்கும் நிலைக்கும் தூக்கத்தின் நிலைக்கும் இடைப்பட்ட நிலையாகும். தூக்கத்திற்கு முன்பு ஓர் இடைப்பட்ட நிலை வருகின்றது. அதில் எல்லா உறுப்புகளுக்கும் ஒரு நிம்மதி கிடைக்கின்றது. அதுதான் ஆழமான நிம்மதி ஆகும். அந்த நிம்மதி அவ்வாறே தொடர்ந்தால் தூக்கமாக மாறிவிடுகின்றது. அவ்வாறான நிலையில் மனிதன் நடந்து கொண்டிருந்தால் அவன் கீழே விழமாட்டான். கீழே விழுவதற்கு முன்பு ஓர் உதறல் ஏற்படும்; அப்போது தான் எந்த நிலையில் இருக்கின்றேன் என்பதை அவன் அறிந்து கொள்கின்றான். தூக்கம் வந்து விட்டது என்றால் பின்னர் (உடல்) உறுப்புகளின் மீது தனது எந்தவோர் அதிகாரத்தையும் மனிதன் செலுத்த முடியாது.

எவ்வாறு இருப்பினும் பிஷ்ர் பின் பராஃ பின் மஃரூர் (ரலி) அவர்களுக்கு அந்நிலையில் அவ்வாறான ஆழமான ஒரு தூக்கமும் வந்திருக்கலாம். போர் நடைபெற்று

கொண்டிருக்கும் நிலையில் அது நிம்மதியை தரக் கூடிய நிலையாக இருந்தது. மனிதன் கீழே விழுந்து விடுகின்றான் என்பதை நாம் சரியென்று ஒப்புக் கொண்டாலும் அதற்கான காரணம் என்னவென்றால், அவரது கைகள் சற்று தளர்ந்து போயிருக்கலாம்; அதனால் வாள் கீழே விழுந்தும் இருக்கலாம்.

எவ்வாறு இருப்பினும், அது எப்படிப்பட்ட நிலையாக இருந்தது என்றால் நான் ஓர் ஆழமான தூக்கத்திற்கு செல்கின்றேன் என்ற உணர்வு அதில் மனிதனுக்கு தோன்றுகின்றது. பிறகு மனிதன் உதறல் எடுத்து விழித்துக் கொள்கின்றான். எனவே அல்லாஹ் கூறுகின்றான்: நாம் உங்களுக்கு எவ்வாறான நிம்மதியான நிலையை வழங்கினோம் என்றால் அதில் தூக்கத்துடன் ஒத்த நிலையாக இருந்தது; எனினும் நீங்கள் உங்கள் மீதும், உங்கள் உடல் உறுப்புகளின் மீதும் எந்த ஆதிக்கத்தையும் பெற முடியாத அளவிற்கு அது ஆழமான தூக்கத்தைப் போன்ற நிலையாகவும் இருக்கவில்லை. அதுவோ உங்களுக்கு நிம்மதியை வழங்கிக் கொண்டிருந்தது. எனினும் அது உங்களை பயனற்றவர்களாகவும் ஆக்கவில்லை.

இவ்வாறே ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது புகாரியினுடைய ஹதீஸ் ஆகும். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: உஹது நாளில் போரின்போது எங்களை லேசான உறக்கம் ஆட்கொண்டு விட்டது. அது எவ்வாறான சிற்றுறக்கம் என்றால் இதனைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: என் கையில் இருந்து வாள் கீழே விழப்போகும்போது நான் அதனை பிடித்துக் கொள்வேன். ஆகவே இந்த ஹதீஸ் கூறுவது என்னவென்றால் கைகளில் இருந்து பொருட்கள் கீழே விழுந்து விடுகின்ற நிலையிலோ அல்லது நடந்து செல்லும்போது நாம் கீழே விழுந்து விடக் கூடிய தூக்கத்தின் நிலையைப் போன்றதாக அது இருக்கவில்லை. மாறாக, அது நிம்மதியை தரக் கூடியதாக இருந்தது. ஓய்வை வழங்கக் கூடிய விஷயமாக இருந்தது. எனினும் உடல் உறுப்புகளின் மீது ஓரளவிற்கு கட்டுப்பாடும் இருந்தது. வாள்கள் கீழே விழ ஆரம்பிக்கும்போது அதனை அவர்கள் பிடித்துக் கொள்வார்கள். அதாவது அது லேசான தூக்கத்தின் பகுதியாக இருந்தது. அது திடீரென்று அவர்களை ஆட்கொண்டு விடவில்லை. மாறாக அது எவ்வாறான ஒரு நிலையாக இருந்தது என்றால் சிறிது நேரம் வரை அந்த நிலை தொடர்ந்தது. திர்மிதி அப்வாபுத் தஃப்ஸீரில் ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகின்றது: அன்னார் (ரலி) கூறுகின்றார்கள். உஹதுப் போர் நாளன்று நான் தலையை உயர்த்திப் பார்த்தபோது ஒவ்வொரு நபரும் தூங்கியவாறு தங்களது கவசத்தின் கீழே குனிந்து கொண்டு சென்றதை நான் கண்டேன். விழிந்திருந்தன் காரணத்தினாலோ அல்லது களைப்பு அடைந்ததன் காரணத்தினாலோ அந்த ஸஹாபிகளின் நிலைமை மிக மோசமானதாக ஆகியிருந்தது. அவ்வாறான நிலையில் அல்லாஹ்வின் புறமிருந்து இந்த நிம்மதியான நிலை கிடைத்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்தக் காட்சி பொதுவான ஒரு காட்சியாக தென்பட்டது. களைப்படைந்த ஒரு போராளியின் மீது ஏற்படக் கூடிய தற்செயலான காட்சியாக அது இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போரில் கலந்து கொண்டு எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்த அந்த அனைத்துப் போராளிகளின் மீதும் திடீரென்று வானத்திலிருந்து ஒரு பொருள் இறங்கியது போன்று அது இருந்தது. அந்த நிலை அவர்களை ஆட்கொண்டுவிட்டது. அந்த நிலையில் அவர்களுக்கு எவ்வாறான நிம்மதி கிடைத்தது என்றால், அவர்கள் தமது உடல் உறுப்புகளை புத்துணர்ச்சி பெறச் செய்து புத்தம் புது சுவாசத்தை அவர்கள் பெறுவதற்கு தகுந்த நிலையாக அது இருந்தது. அது தூங்கக் கூடிய நிலையாக இருக்கவில்லை. அவ்வாறான நிலை ஏற்படும்போது, அவ்வாறான களைப்பின் நிலை இருக்கும்போது மனிதன் மீது அதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டு விடுகின்றது.

எவ்வாறு இருப்பினும், முழு சமுதாயமும் ஒரே நேரத்தில் ஒரு தூக்கத்தின் நிலைக்கு சென்று விட்டது. அப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிரிகளிடமிருந்து கடுமையான அபாயத்தின் சூழல் இருந்தது. அது ஓர் அதிசயமாக இருந்தது. அது தற்செயலாக நிகழ்ந்த விபத்து ஒன்றும் கிடையாது. இதுபோன்ற நிலை மக்களுடன் நிகழ்ந்து விடுகின்றது. எனினும் இது தற்செயலாக நிகழ்ந்தது அல்ல. மாறாக இது ஓர் ஆச்சரியமான நிலையாக இருந்தது. அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு குறிப்பான நிம்மதியின் நிலை அந்நேரம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அல்லாமா அப்துர் ரஸ்ஸாக் ஸாஹிப் அவர்கள் ஸுஹ்ரி அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்தவாறு எடுத்துக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளி மிகுந்த முகத்தில் வாள்களின் மூலமாக 70 முறை தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. ஆனால், அல்லாஹ் அன்னாரை அந்த அனைத்து தீங்கிலிருந்தும் காப்பாற்றினான். இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் கூறுகின்றார்கள்: ஸுஹ்ரீ அவர்கள் 70 என்று கூறியிருப்பது உண்மையிலேயே அந்த எண்ணிக்கை 70 ஆக இருக்கலாம். அல்லது எண்ணிக்கையில் மிகைப்படுத்தி கூறுவது நோக்கமாகவும் இருந்திருக்கலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று எவர் போர் புரிந்தாரோ அவர் அனைவரையும் விட பெரும் வீரராக கருதப்பட்டு வந்தார். ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் ஆபத்தான இடங்களில் தான் இருப்பார்கள். ஸுப்ஹானல்லாஹ்! அன்னாருடைய மகத்துவம் எந்த அளவிற்கு உயர்ந்ததாக இருக்கின்றது என்று பாருங்கள்! உஹது போரில் தொடர்ச்சியாக வாள்கள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. எப்படிப்பட்ட ஆக்ரோஷமான போர் நடந்து கொண்டிருந்தது என்றால் அதனை ஸஹாபிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், இந்தப் போர்க் கள வீரர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இதில் ஸஹாபிகளின் மீது எந்தத் தவறும் கிடையாது. அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான். இன்னும்கூறப்போனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீரத்தின் முன்மாதிரி காட்டப்பட வேண்டும் என்பதே இதிலிருந்த இரகசியம் ஆகும். ஒரு சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாக வாள்கள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. அப்போது நான் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) ஆவேன் என்று அன்னார் (ஸல்) தமது நபித்துவ வாதத்தை அறிவித்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் 70 வெட்டுக் காயங்கள் இருந்ததாக கூறப்படுகின்றது. ஆனால், அந்தக் காயங்கள் மிக நுட்பமானவையாக இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குழிக்குள் விழுந்த சம்பவம் குறித்து அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. அபூ ஆமிர் ஃபாஸிக் என்பவன் உஹது போர்க் களத்தில் பல குழிகளை ஆங்காங்கே தோண்டி வைத்திருந்தான். முஸ்லிம்கள் அதில் விழ வேண்டும்; பாதிப்படைய வேண்டும் என்பது அவனது நோக்கமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறியாமல் அந்தக் குழிகளில் ஒன்றில் விழுந்து விட்டார்கள். பின்னர் அன்னார்(ஸல்) மயங்கி விட்டார்கள். அன்னாருடைய இரு (கால்) மூட்டுகள் காயமடைந்து விட்டன. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உடனடியாக முன்னேறிச் சென்று தமது கைகளில் பிடித்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் அன்னாரை வெளியே கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விழுவதற்கு காரணமாக இருந்த துர்பாக்கியசாலியான இப்னு கமீயா என்பவன் வாளைக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தான். வாள் வீச்சு அன்னாருடைய கழுத்தில்பட்டது. எனினும், அது அன்னாருடைய கழுத்தில் எந்தக் காயத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், அந்தத் தாக்குதலின் காரணமாக அன்னாருடைய கழுத்து எந்த அளவிற்கு கடுமையாக சுளிக்கு விட்டது என்றால், அதன் பிறகு ஒரு மாதம் அல்லது அதை விட அதிகமான காலம் கட்டம் வரை அன்னாருடைய கழுத்தில் வலி இருந்து வந்தது வந்தது. அத்துடன் அவன் அன்னாரின் மீது கற்களையும் வீச ஆரம்பித்தான். அதில் ஒரு கல் அன்னாரின் மீது பட்டது. அப்போது ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களின் சகோதரர்களில் ஒருவனான உத்பா பின் அபீ வகாஸ் என்பவன் அன்னாரின் மீது கற்களை எறிந்தான். அதில் ஒரு கல் அன்னாரின் முகத்தில் பட்டது. அதனால் அன்னாருடைய இரு பற்கள் உடைந்துவிட்டன. மேலும் கீழ் உதட்டிலும் காயம் ஏற்பட்டது.

இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் கூறுகின்றார்கள்: பல்லின் ஒரு பகுதி உடைந்து விட்டது. எனினும் அது முழுவதுமாக பெயர்ந்து வரவில்லை. கல் எறிந்தது தனது சகோதரனான உத்பா தான் என்பதை ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கேள்விபட்டபோது, அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தது தமது சகோதரன் ஆவான் என்பதை அறிந்தபோது அவர்கள் பழிவாங்குவதற்காக அவனை பின் தொடர்ந்து படைக்குள் நுழைந்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வகாஸ் (ரலி)

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அவர்கள் கூறுகின்றார்கள்: அவனைக் கொல்வது எனது இலக்காக இருந்தது. அதில் எனக்கு எந்த அளவுக்கு ஆவல் இருந்தது என்றால் உலகில் வேறு எந்த விஷயத்திற்காகவும் அப்படி ஆவல் ஏற்பட்டதாக எனக்கு தெரியவில்லை. ஆனால், உத்பாவோ அன்னாரை ஏமாற்றி விட்டு தப்பி விட்டிருந்தான். ஹஸ்ரத் ஸஅத் (ரலி)அவர்கள் மீண்டும் அவனை தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். ஒவ்வொரு முறையும் அவன் நழுவிக் கொண்டிருந்தான். மூன்றாவது முறையாக ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் புறப்பட்டபோது, இறை அடியானே! உமது உயிரைக் கொடுப்பது உமது நோக்கமா என்ன? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்த பிறகு நான் செல்லவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்பா பின் அபீ வகாஸிற்கு எதிராக இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ لَا يَحُوْلُ عَلَيْهِ الْحَوْلُ حَتّٰى يَمُوْتَ كَافِرًا

அல்லாஹ்வே! அவன் காஃபிராக இருக்கின்ற நிலையில் ஒரு வருடத்திற்குள் அவன் இறந்து விட வேண்டும் என்று அன்னார் (ஸல்) துஆ செய்தார்கள். அல்லாஹ் அன்னாரது துஆவை எவ்வாறு ஒப்புக் கொண்டான் என்றால், அந்த நாளிலேயே ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தா அவர்களின் கரங்களால் அவன் கொல்லப்பட்டு விட்டான். ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உத்பா பின் அபீ வகாஸுடைய கீழ்த்தரமான செயலை நான் கண்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உத்பா எந்தப் பக்கமாக சென்றான்? என்று நான் கேட்டேன். அவன் சென்ற திசையை அன்னார் (ஸல்) சைகை செய்து காட்டினார்கள். உடனேயே அவனை நான் பின் தொடர்ந்து சென்றேன். எதுவரை என்றால், ஓரிடத்தில் அவனை பிடிப்பதில் நான் வெற்றி பெற்று விட்டேன். உடனடியாக நான் அவன் மீது வாள் வீசினேன். அதன் காரணமாக அவனது தலை வெட்டப்பட்டு தூரத்தில் சென்று விழுந்தது. நான் அவனுடைய வாள் மற்றும் குதிரையை கைப்பற்றி அவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த செய்தியைக் கேட்டு விட்டு

رَضِيَ اللّٰهُ عَنْكَ۔ رَضِيَ اللّٰهُ عَنْكَ

என்று இருமுறை கூறினார்கள். அதாவது அல்லாஹ் உம் மீது திருப்தி கொள்வானாக! அல்லாஹ் உம் மீது திருப்தி கொள்வானாக! என்று கூறினார்கள். இந்த தாக்குதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைக் கவசமும் உடைந்து விட்டது. அத்துடன் எதிரியின் தொடர்ச்சியான தாக்குதலின் காரணமாக அன்னாருடைய அருளுக்குரிய முகத்திலும் காயம் ஏற்பட்டது. அன்னாருயை அருளுக்குரிய முகத்தில் தாக்குதல் தொடுத்தவர் அப்துல்லாஹ் பின் ஷஹாப் பின் ஸஹ்ரீ என்பவர் ஆவார். இவர் பிற்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவி விட்டார். இந்த விவரங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. இன்ஷாஅல்லாஹ்! எதிர்வரும் நாட்களில் எடுத்துரைப்பேன்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துக் கூற விரும்புகின்றேன். முதலாவது நற்குறிப்பு பாலஸ்தீனத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அபூஹில்மீ முஹம்மது உகாஷா ஸாஹிப் அவர்களுடையதாகும். ஷரீஃப் ஓதே ஸாஹிப் மர்ஹூமைக் குறித்து எழுதுகின்றார்கள். சில நாட்களுக்கு முன் காஸா பகுதியில் நம்முடைய அஹ்மதி சகோதரர் முஹம்மது உகாஷா ஸாஹிப் அவர்கள் மிகவும் இரக்கமற்ற முறையில் ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள். அன்னாருடைய உடல் அவருடைய வீட்டிலிருந்து சற்று தூரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் மிகவும் தூய அஹ்மதியாக இருந்தார்கள். அன்னாரின் வயது 75 ஆகும். தம்முடைய சொந்த கிராமத்திலிருந்து ஹிஜ்ரத் செய்து காஸாவின் பகுதியான ஜமாலியானில் புகலிடம் கொடுக்கப்பட்டிருந்த முகாமில் வசித்து வந்தார்கள். அன்னாருக்கு ஏழு மகன்களும், ஐந்து மகள்களும் 33 பேரன் பேத்திகளும் உள்ளனர். அன்னாரின் மகன் வழிப் பேரன் கூறுகின்றார்: பல வாரங்களாக அன்னாருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. தற்காலிக போர் நிறுத்தத்தின்போது அன்னாரை தேடி நான் புறப்பட்டுச் சென்றேன். அன்னார் வீட்டில் இருக்கவில்லை. அன்னாருடைய வீட்டிலிருந்து நூறு மீட்டர் தொலைவில் சிதறிக் கிடந்த சடலங்களுக்கு மத்தியில் அன்னாருடைய உடல் கிடந்தது. தலையில் சுடப்பட்டு அன்னார் ஷஹீதாக்கப்பட்டிருந்தார்கள்.

காஸாவைச் சேர்ந்த யாஸீர் ஷாஹீன் ஸாஹிப் என்ற ஓர் அஹ்மதி கூறுகின்றார்: மர்ஹூம் அவர்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் (எம்.டி ஏ) டிஸ் வைத்தார்கள். அப்போது எம்.டி ஏ சேனலை தேடுவதற்கு தமக்கு உதவி செய்யுமாறு என்னிடம் கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் எனக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிய வந்தது. சிறிது காலத்திற்கு பிறகு, அவர்கள் ஜமாஅத்தைக் குறித்து எனக்கு மேற்கொண்டு எடுத்துக் கூறினார்கள். சில நூல்களையும் எனக்கு அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு எங்களுக்கிடையில் விவாதம் தொடர்ந்து கொண்டிருந்தது. அதன் பிறகு நான் இஸ்திகாரா செய்தேன். பிறகு என் மனைவியுடன் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் பைஅத் செய்ததைக் கண்டு மதிப்பிற்குரிய முஹம்மது உகாஷா ஸாஹிப் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அதன் பிறகு எங்களுடைய தொடர்பு மிகவும் உறுதியாகிக் கொண்டே சென்றது. அன்னார் பல மணிநேரம் எனக்கு பல்வேறு திருக்குர்ஆன் வசனங்களுக்கு விளக்கவுரை கூறுவார்கள். தஃப்ஸீரே கபீரிலிருந்து மேற்கோள்களை எனக்கு படித்துக் காட்டுவார்கள். மேலும் நாஸிக் மன்ஸூக் போன்ற விவகாரங்களை புரிய வைப்பார்கள். அன்னாருடைய விளக்கமளிக்கும் முறை மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கும். நீண்ட காலமாக ஒரு நூலை அன்னார் எழுதி வந்தார்கள். என்னை அழைத்து அதனை வாசித்துக் காட்டுவார்கள். இன்னும் அதனை மேம்படுத்துவார்கள். பல்வேறு விஷயங்களை விவாதிப்பார்கள். தம்முடைய வீட்டை விரிவுபடுத்தி அதில் நூலகம் அமைக்க வேண்டும்; அதில் ஜமாஅத்துடைய நூல்களின் பிரதிகளை வைக்க வேண்டும் என்பது அன்னாருடைய விருப்பமாக இருந்தது. ஆனால், அஹ்மதிய்யத்தின் காரணமாக அன்னார் மீது அன்னாருடைய குடும்பம் அநீதி இழைத்தது. எனவே அன்னாருடைய இந்த விருப்பம் முழுமை பெறவில்லை. அன்னாரின் மூலமாகவே காஸா ஜமாஅத்துடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. நாங்கள் அனைவரும் அன்னாருடைய சந்திப்பு அறையில் அன்னாரை சந்தித்து வந்தோம். கடைசியாக சில வருடங்களில் அன்னாரின் உடல்நிலை மோசமானதன் காரணமாக வீட்டில் தான் இருந்து வந்தார்கள். எப்பொழுதாவது அன்னார் வெளியில் செல்வார்கள்.

காஸாவின் மற்றோர் அஹ்மதி கூறுகின்றார்: மர்ஹூம் உயரமான தோற்றமுடையவராகவும், மெலிந்த தேகம் கொண்டவராகவும், வெள்ளை தாடி கொண்டவராகவும் இருந்தார்கள். அன்னாருடைய நன்மை மற்றும் இறையச்சத்தின் தாக்கம் எதிரியின் மீது உடனே ஏற்பட்டு விடும். எப்போதும் இறைவனை நினைவு கூர்ந்து வந்தார். ஜமாஅத் நூல்களை படிப்பதில் ஈடுபட்டு வந்தார்கள். தம்முடைய வீட்டிற்கு அருகில் பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும் என்று அன்னார் மிகவும் விருப்பப்பட்டு வந்தார்கள். 2014- ஆம் ஆண்டில் போருக்கு பிறகு அன்னார் ஒரு கட்டுரை எழுதினார்கள். அதில் அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஒரு நாள் வரும்; அப்போது கப்ருகளின் மீது குண்டு மழை பொழியும். அவர்களின் ஊர்களும்,கற்களும் இங்கும் அங்கும் சிதறிப்போய் விடும். பின்னர் அவ்வாறே நிகழ்ந்தது. துன்பங்கள் சூழ்ந்திருந்தபோதிலும் சந்திக்கும் ஒவ்வொரு நபரையும் இன்முகத்துடன் சந்தித்து வந்தார்கள். மிகவும் வள்ளல் தன்மை கொண்டவராகவும்,புத்திசாலியாகவும், மற்றவர்களின் சிந்தனையை விரைவில் புரியக் கூடியவராகவும் மர்ஹூம் இருந்தார்கள்.

டாக்டர் யூசுஃப் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: சகோதரர் அபூஹில்மி அவர்கள் மிகவும் தூய உண்மையான அஹ்மதியாக திகழ்ந்தார்கள். அஹ்மதியாக ஆகுவதற்கு முன்பே அவரது சிந்தனையும், செயல்பாடும் அஹ்மதிகளைப் போன்றே இருந்தது. எனவே ஜமாஅத்தைப் பற்றி அறிந்த உடனேயே பைஅத் செய்து விட்டார்கள். சான்றோர்கள் மற்றும் அக்கம் பக்கத்து மக்களிடம் ஜமாஅத்தைக் குறித்து பேசி வந்தார்கள். அதன் காரணமாக அன்னாருக்கு நெருக்கமானவர்களின் தரப்பிலிருந்து மிகவும் எதிர்ப்பையும், துக்கத்தையும், துன்பங்களையும் எதிர் கொள்ள வேண்டியது வந்தது. கடைசி காலத்தில் ஊன்றுகோலின் உதவியால் நடந்து சென்று ஜுமுஆ மற்றும் கூட்டங்களில் கலந்து கொண்டு வந்தார்கள். அனைவருக்கும் முன்னரே வந்து விடுவார்கள். அன்னார் மிகவும் சிரமத்தில் இருந்தபோதிலும் எதிரிகளின் காரணமாக செல்கின்ற பாதையில் அதிக அபாயத்தை எதிர் கொள்ள வேண்டியது இருந்தபோதிலும் அன்னார் சென்று வந்தார்கள். பொருளாதார நெருக்கடி இருந்தபோதிலும் மற்றவர்களுக்கு முன்பாகவே சந்தாக்களை செலுத்தி விடுவார்கள். ஜமாஅத்தும் ஜமாத்தின் போதனைகளும் முழு உலகிலும் மிகைத்து விட வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள். ஏனெனில், அதில் தான் மனித குலத்தின் அனைத்து துன்பங்களுக்கும் தீர்வு உள்ளது என்று கருதினார்கள். தமது வீட்டையும், தமது நிலத்தின் ஒரு பகுதியையும் ஜமாஅத்திற்கு கொடுத்து விட வேண்டும் மேலும் அதன் மூலமாக பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும்; மேலும் ஜமாஅத்தின் தலைமையகம் உருவாக வேண்டும் என்றும் அன்னார் விரும்பினார்கள். ஆனால், எதிராளிகளாக இருந்த உறவினர்கள் அதற்கு தடைகளாக ஆகிவிட்டார்கள். அல்லாஹ் மர்ஹூமின்

அந்தஸ்தை உயர்த்துவானாக! மேலும், அன்னாரின் துஆக்களுக்கு அன்னாருடைய பிள்ளைகளை வாரிசாக்குவானாக. அன்னாருடைய பிள்ளைகளும், அன்னாருடைய நண்பர்களும் அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தை புரியக் கூடியவர்களாக ஆகட்டுமாக! அமைதி மற்றும் நிம்மதியை காணக் கூடியவர்களாக ஆகட்டுமாக! அன்னாருடைய பகுதியில் அல்லாஹ் அமைதியை நிலைபெறச் செய்வானாக! அநீதியாளரின் கரத்தை அல்லாஹ் தடுத்து நிறுத்துவானாக. அநீதியாளருக்கு முடிவு கட்டுவானாக.

இஸ்ரேல் தற்போது லெபனானின் எல்லைப் பகுதியில் ஹிஸ்புல்லாஹ் குழுவுக்கு எதிராக வெளிப்படையாக போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு உள்ளது. இதனால் சூழ்நிலை மேலும் மோசமாக ஆகிவிடலாம். அதேபோன்று அமெரிக்காவும் ஏமனுடைய ஹுதி குழுக்களுக்கு எதிராக பகிரங்கமாக போரை ஆரம்பித்துள்ளது. இந்த அனைத்து விஷயங்களும் போரை மேற்கொண்டு விரிவுபடுத்துகின்றன. தற்போது எழுதக் கூடிய பலர் இதில் உலகப் போரின் அறிகுறிகள் மிக அருகில் இருப்பதாக தென்படுகின்றன என்று எழுதி வருகின்றனர். எனவே துஆக்களுக்கான மிக அதிக தேவை இருக்கின்றது. அல்லாஹ் மனித குலத்திற்கு அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ஜெர்மனியைச் சேர்ந்த ஜமாஅத்தின் முபல்லிஃக் ஹைதர் அலி ஸாஹிப் அவர்களின் மனைவி மர்ஹூமா அமத்துன் நஸீர் ஹைதர் ஸாஹிபா அவர்களைப் பற்றியது ஆகும். கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளினால் மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூமா தமது கணவர் இரு மகன்கள் மற்றும் ஒரு மகள் ஆகியோரை தமக்கு பின்னால் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமாவின் தாய்வழிப் பாட்டனார் ஹஸ்ரத் சவ்த்ரி அமீனுல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் ஸஹாபி ஆவார்கள். மர்ஹூமாவின் கணவர் ஹைதர் அலி ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நான் முரப்பியாக செயற்களத்தில் பணியாற்றி வந்தேன். பல்வேறு காலகட்டங்களில் சுமார் 12 வருடங்கள் வரை இவர் என்னை விட்டு பிரிந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும், ஒருபோதும் முறையிட்டது கிடையாது. ஒருமுறை இதைக் குறித்து பேச்சு வரும்போது ஏதோ ஒரு விஷயத்தில் அன்னார் டிஸ்டர்ப் ஆகியிருந்ததாக கூறினார்கள். இதைக் குறித்து முன்பே நீங்கள் ஏன் கூறவில்லை? என்று நான் கேட்டபோது, உங்களுக்கு அங்கே செயற்களத்தில் தொந்தரவு ஏற்படக் கூடாது என்பதற்காக நான் கூறவில்லை என்று அன்னார் கூறினார்கள். ஃபிரன்ஃபர்ட்டில் பைத்துஸ் ஸுபூஹ் பகுதியில் லஜ்னா அமைப்பின் தலைவியாகவும் இருந்துள்ளார்கள். கிலாஃபத் ஜூப்லி வருடத்தில் ஸத்ர் லஜ்னாவாக தொண்டாற்றும் நற்பேறும் அன்னாருக்கு கிடைத்திருந்தது. அல்லாஹ்வின் அருளினால் தொழுகை, நோன்பு போன்றவற்றை அன்னார் மிகவும் பேணி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். திருக்குர்ஆனை முறையாக திலாவத் செய்யக் கூடியவராகவும், அதிகமாக தான தருமங்கள் செய்யக் கூடியவராகவும், குறித்த நேரத்தில் சந்தாக்களை செலுத்தக் கூடியவராகவும் மர்ஹூமா இருந்துள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஹபீபுல்லாஹ் காஹ்லூன் ஸாஹிப் அவர்களின் மனைவியாகிய மதிப்பிற்குரிய நஸீமா அக்தர் ஸாஹிபா அவர்களைப் பற்றியதாகும். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளினால் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். மரணத்திற்கு முன்பு வரையிலான வஸிய்யத்துடைய அனைத்து கணக்குகளையும் முன்னரே முழுமையாக செலுத்தி இருக்கின்றார்கள். சொத்துக்களுக்கான சந்தாவையும் தமது வாழ்நாளிலேயே செலுத்திவிட்டார்கள். தமது கணவரையும், ஆறு மகன்களையும், இரு மகள்களையும் தமக்கு பின்னால் விட்டுச் சென்றுள்ளார்கள். ஒரு மகள் அன்னாருடைய வாழ்நாளிலேயே மரணமடைந்து விட்டார்கள். அந்த மகளுடைய பிள்ளைகளையும் மிகவும் நேசத்துடன் பராமரித்து வந்தார்கள். அவர்களுக்கு கல்வி வழங்கினார்கள். மகன்களில் நான்கு பேர் வாழ்வை அர்ப்பணித்தவர்களாக இருக்கின்றனர். நவீது ஆதில் என்ற ஒரு மகன் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார். லைபீரியாவில் மிஷனரி இன்சார்ஜாக இருக்கின்றார். அவர் செயற்களத்தில் இருந்ததன் காரணமாக தமது தாயாரின் ஜனாஸாவில் அவரால் கலந்து கொள்ள இயலவில்லை.

அவர் கூறுகின்றார்: மர்ஹூமாவின் குடும்பத்தில் அன்னாருடைய தந்தை மவ்லா பக்ஷ் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. அன்னார் இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் பைஅத் செய்திருந்தார்கள். மர்ஹூமாவினுடைய மார்க்கக் கல்வி மிகவும் நல்ல தரத்தில் இருந்தது. சில சமயங்களில் சந்திக்கக் கூடியவர்கள் நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்? என்று கேட்பார்கள். உலகக் கல்வியோ மிக சாதாரணமாகத்தான் இருந்தது. மார்க்கக் கல்வியில் தமக்கு இருந்த ஆர்வத்தைக் குறித்து மர்ஹூமா கூறும்போது, இது தமது தந்தையின் காரணமாக தமக்கு கிடைத்தது என்று மர்ஹூமா கூறுவார்கள். ஏனெனில், எங்களுடைய தந்தையார் பள்ளிவாசலில் என்ன தர்ஸைக் கேட்பார்களோ அதனை வீட்டிற்கு வந்து கண்டிப்பாக கூறுவார்கள் என்று கூறினார்கள். எனவே பெற்றோர்களுடைய பெரும் தாக்கமும் ஏற்படுகின்றது. குடும்பங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் நடக்கும் என்றால் பின்னர் இதுபோன்ற நல்ல தாக்கங்களும் ஏற்படும். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் கொண்டிருந்தார்கள். மிகவும் துணிவு மிக்க மார்க்கத் தன்மானம் கொண்ட பெண்மணியாக இருந்தார்கள். ஜமாஅத் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுக்கு எதிராக எந்தவொரு விஷயத்தையும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். தொழுகைகளை மிகவும் பேணி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், முறையாக இஃதிகாஃப் இருக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். தமது வாழ்வின் கடைசி வருடத்தில் இஃதிகாஃப் இருக்க முடியவில்லை. ரமலானில் மூன்று அல்லது நான்கு முறை திருக்குர்ஆனை முழுவதுமாக ஓதி முடித்து விடுவார்கள். இங்கும் அங்கும் நடக்கும்போதெல்லாம் துரூத் ஷரீஃப் மற்றும் திக்ர் செய்யக் கூடிய பழக்கமுடையவராக அன்னார் இருந்தார்கள். ஒருமுறை கீழே விழுந்ததன் காரணமாக அன்னாருடைய கால் முறிந்து விட்டது. அப்போது அன்னாருடைய ஒரு மகன் அங்கு இருந்தார். அந்த நாள் அவர் புறப்பட வேண்டிய நாளாக இருந்தது. அந்நாளில் மர்ஹூமா கீழே விழுந்து விட்டார்கள். அப்போது மர்ஹூமா தமது மகனிடம், நீ டியூட்டிக்கு செல் என்று கூறி அவரை அனுப்பி வைத்து விட்டு மற்றொரு கிராமத்தில் இருந்து அதாவது தமது பக்கத்து கிராமத்தில் இருந்த தமது மருமகனை வரவழைத்தார்கள். அவருடன் மருத்துவ மனைக்குச் சென்றார்கள். நீ உடனடியாக மார்க்கத் தொண்டிற்காக புறப்படவேண்டியது உனது பணியாகும் என்று கூறி தமது மகனை அனுப்பி வைத்துவிட்டார்கள்.

நவீது ஆதில் ஸாஹிப் கூறுகின்றார்: ஏழு வருடங்களுக்கு பிறகு விடுமுறையில் சென்றிருந்தபோது அன்னாரை நான் சந்தித்தேன். அப்போது அன்னார் எனக்கு செய்த அறிவுரை என்னவென்றால், வாழ்வும் மரணமும் அல்லாஹ்வினுடைய கையில் உள்ளது. ஒருவருடைய நேரம் எப்போது வரும் ? என்று தெரியாது. அதுபோன்ற நேரம் வந்து விட்டால் நீ உனது டியூட்டியை விட்டு விட்டு வரக் கூடாது. அங்குதான் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எனவே இவர்கள் தமது சென்டரில் இருக்கின்றார்கள். தமது தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ளவில்லை.

அடுத்த நற்குறிப்பு, பஷீர் ஆபாத் ஸ்டேட்டைச் சேர்ந்த ரஷீத் அஹ்மத் ஸமீர் ஸாஹிப் அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய முபாரகா பேகம் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னாரும் கடந்த நாட்களிலும் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களுடைய குடும்பத்தில் இவர்களுடைய தந்தை வஹ்ஹாபுல் ஹக் ஸாஹிப் அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. 1948-ம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கைகளில் அன்னார் பைஅத் செய்தார்கள். மர்ஹூமா பல்வேறு சிறப்பு அம்சங்களுக்கு சொந்தக்காரராக திகழ்கின்றார்கள். ஐவேளை தொழுகைகளையும், தஹஜ்ஜுத் தொழுகைகளையும் முறையாக பேணக் கூடியவராகவும், தன்னலமற்ற முறையில் ஜமாஅத் தொண்டுகளை செய்யக் கூடிய நல்ல மற்றும் தூய பெண்மணியாகவும் திகழ்ந்தார்கள். மேலும் ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்பில் அன்னார் இருந்துள்ளார்கள். பல்வேறு தொண்டுகளை ஆற்றுவதற்கு நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள். லஜ்னாவின் ஸதராகவும் இருந்துள்ளார்கள். ஏறக்குறைய முழு வாழ்வையும் ஜமாஅத்தின் தொண்டில் கழித்துள்ளார்கள். எண்ணற்ற ஆண், பெண் பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக்

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

கொடுத்துள்ளார்கள். பர்தாவை மிகவும் அதிகமாக கருத்தில் கொள்ளக் கூடிய பெண்மணியாக மார்ஹூமா இருந்துள்ளார்கள். பெண் பிள்ளைகளுக்கும் பர்தாவை வலியுறுத்தி வந்தார்கள். கித்மதே கல்க் பணிகளில் முந்திச் சென்று பங்கெடுப்பார்கள். ஏழைகள் மற்றும் விதவைகள் ஆகியோருடைய தேவைகளை கருத்தில் கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். பல ஏழை, அனாதைப் பெண்களின் திருமணங்களில் அவர்களுக்கு உதவி செய்துள்ளார்கள். பல பெண் பிள்ளைகளுக்கு தையல் கற்றுக் கொடுத்துள்ளார்கள். ஒவ்வொரு ஜுமுஆ நாளன்றும் ஜுமுஆவிற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்னதாகவே பள்ளிவாசலுக்கு வந்து விடுவார்கள். பெண்கள் பகுதியை அவர்களே சுத்தம் செய்வார்கள். பின்னர் நஃபில் தொழுவார்கள். மிகவும் நம்பிக்கைக்குரிய பெண்மணியாக இருந்துள்ளார்கள். பல பெண்கள் தங்களுடைய நகைகளையும், பணத்தையும் நம்பிக்கையின் காரணமாக அமானிதமாக அன்னாரிடம் கொடுத்து வைப்பார்கள். அன்னார் தாம் வஸிய்யத் செய்யும்போதே தமது பிள்ளைகளையும் வஸிய்யத் செய்ய வைத்து விட்டார்கள். அதே போன்று ஊரில் இருக்கக் கூடிய பல பெண்களையும் வஸிய்யத் அமைப்பில் இணைத்து விட்டார்கள். கணவரையும் ஒரு மகனையும் ஐந்து மகள்களையும் பின்விட்டுச் சென்றுள்ளார்கள்.

ஸிராலியோனில் முரப்பியாக பணியாற்றும் மதிப்பிற்குரிய உஸ்மான் அஹ்மத் ஸாஹிப் மற்றும் ஃபுர்கினோபாஸாவில் முரப்பியாக பணியாற்றும் மதிப்பிற்குரிய ஸஆதத் அஹ்மத் ஸாஹிப் ஆகியோரின் மாமியார் ஆவார்கள். முரப்பிகளுக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ள இரு மகள்களும் தாயாருடைய இறுதி வேளையில் அங்கு இருக்க முடியவில்லை. மாறாக தொண்டாற்றி வரும் தத்தமது இடத்தில் இவர்கள் இருவரும் இருந்துள்ளனர்.

மார்ஹூமாவின் மகள் ஆஸிஃபா ஸாஹிபா கூறுகின்றார்கள்:

நான் எனது கணவர் உஸ்மான் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடன் ஸிராலியோனில் தொண்டாற்றக் கூடிய நற்பேறு பெற்று வருகின்றேன். செயற்களத்தில் இருப்பதன் காரணத்தினால் தாயாருடைய ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. அதேபோன்று எனது இளைய சகோதரி மர்யம் புஷ்ரா ஃபுர்கினாபாஸாவில் இருக்கின்றார். அவராலும் கலந்து கொள்ள முடியவில்லை.

அல்லாஹ் இவர்களுக்கு பொறுமை மற்றும் துணிவை வழங்குவானாக! மார்ஹூமாவுடன் அல்லாஹ் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. சந்ததிகளுக்காக மார்ஹூமா செய்த துஆக்களை இவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் நிறைவேற்றுவானாக!

* * * * * *

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

## தலையங்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி.......)

அதற்கு எதிரில் நிற்க முடியாது. ஏனெனில், இறைவன் எமது துஆக்களை கேட்கின்றான்; மேலும் ஒப்புக் கொள்கின்றான். மேலும், வெளிப்படையான காரணிகள் முற்றிலும் எதிராக இருக்கின்ற நிலைமைகளிலும் துஆக்களை ஒப்புக் கொள்கின்றான். இதுவே இஸ்லாம் உயிருள்ள மார்க்கமாக இருப்பதற்கான மாபெரும் அடையாளமாகும். எவருக்காவது இதில் ஐயம் இருக்குமென்றல் அவர் வரட்டும்; வந்து சோதித்து பார்க்கட்டும். தங்களது மார்க்கம் உயிருள்ள மார்க்கமாகும் என்று நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் இருக்கின்றனர் என்றால் அவர்கள் வரட்டும்; மேலும் அவர்களுக்கு இறைவனுடன் இருக்கும் தொடர்பிற்கும், நேசத்திற்கும் சான்று பகரட்டும். இறைவனுக்கு அவர்கள் மீது நேசம் இருக்குமென்றால் பின்னர் நிச்சயமாக அவன் போட்டியில் அவர்களுக்கு உதவி செய்வான்.

நான் அவர்களுக்கு சவால் விடுகின்றேன்; நீங்கள் போட்டிக்கு வாருங்கள்; அப்போதுதான் இறைவன் யாருக்கு உதவி செய்கின்றான்? என்பதும், யாருடைய துஆவைக் கேட்கின்றான்? என்பதும் நிரூபணமாகும்!

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் நீங்கள் உங்கள் சார்பாக இந்த போட்டிக்கு (உரிய) நபர்களை முன்னிறுத்த வேண்டும். ஆயினும்,அதற்காக ஒவ்வொருவரும் எழுந்து நின்று நான் போட்டியிடுகின்றேன் என்று கூறக் கூடாது.மாறாக, எவர் ஒரு மார்க்கம் அல்லது பிரிவின் பிரதிநிதியாக இருப்பாரோ அவர் இந்த போட்டிக்கு முன்வரவேண்டும். அந்நிலையில் இறைவன் எவரது துஆவைக் கேட்கின்றான்? என்று உலகத்திற்கு தெரிந்து விடும். எமது துஆவே ஒப்புக் கொள்ளப்படும் என்று நான் வாதம் செய்து கூறுகின்றேன். வேதனை என்னவென்றால், பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த பெரும் பெரும் நபர்கள் கூட இந்த போட்டிக்கு வருவதற்கு அஞ்சுகின்றனர். அவர்கள் போட்டிக்கு வந்தால், பின்னர் அவர்களுக்கு எப்படிப்பட்ட தோல்வி கிடைக்கும் என்றால் பின்னர் அவர்களுக்கு போட்டிக்கு வருவதற்கு துணிவே இருக்காது.

(ஸிந்தா மஸ்ஹப், அன்வாருல் உலூம், தொகுதி 3, பக்கம் 612)

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

உலகிலுள்ள அனைத்து கல்விகளின் அடிப்படையையும் நான் அறிந்திருக்கின்றேன். அந்தக் கல்விகளின் புத்தகங்களை நான் படிக்காமலேயே எனக்கு இறைவன் அவற்றைக் குறித்த ஞானத்தை வழங்கியுள்ளான். மேலும், நான் திருக்குர்ஆனின் அடிப்படையிலேயே அந்தக் கல்விகளை பார்க்கின்றேன். எனவே எப்போதும் சரியான முடிவையே நான் சென்றடைகின்றேன். மேலும், ஒருபோதும் ஒருமுறை கூட அல்லாஹ்வின் அருளினால் எனக்கு எனது கருத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 13, பக்கம் 502)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மூலமாக முழு உலகிலும் இஸ்லாத்தின் பிரச்சாரம் நடைபெற்றுள்ளது. மேலும் ஜமாஅத் முழு உலகிலும் பரவி விட்டது. 1944-ம் ஆண்டில் அன்னாருடைய அருளுக்குரிய கிலாஃபத் காலகட்டத்தில் அஹ்மதிய்யத் எந்த அளவிற்கு உலகில் விசாலமாக பரவிவிட்டது என்பதை பாருங்கள்!

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் உலகில் பல்வேறு திசைகளில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை பரப்புவதற்காக மிஷன் ஹவுஸ்களை நிறுவி விட்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது, அந்தநேரத்தில் இந்தியாவிலும் மற்றும் ஓரளவு ஆஃப்கானிஸ்தானிலும் மட்டுமே அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைபெற்றிருந்தது. வேறு எந்த இடத்திலும் அஹ்மதிய்யா மிஷன் நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆனால், அவர் பூமியின் எல்லை வரை பிரபல்யம் அடைவார் என்று இறைவன் முன்னறிவிப்பில் கூறியிருந்தது போன்று பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யா மிஷன்களை நான் நிறுவுவதற்கு இறைவன் எனக்கு நற்பேறு வழங்கினான்.

ஆக, நான் எனது கிலாஃபத்தின் துவக்கத்திலேயே இங்கிலாந்து, சிலோன் மற்றும் மொரீசியஸில் அஹ்மதிய்யா மிஷன்களை நிறுவினேன். பின்னர் இந்த ஜமாஅத் முன்னேறியது; மேலும் முன்னேற்றமடைந்து கொண்டே சென்றது. ஆக, ஈரானிலும்,ரஷ்யாவிலும், எகிப்திலும், சிரியாவிலும், பாலஸ்தீனத்திலும், நைஜீரியாவிலும், கோல்ட்கோஸ்டிலும், ஸிராலியோனிலும், ஈஸ்ட் ஆஃப்ரிக்காவிலும், ஐரோப்பாவிலும்,இங்கிலாந்து மட்டுமின்றி ஸ்பெயினிலும், இத்தாலியிலும், செக்கோஸ்லோவியாவிலும், ஹங்கேரியிலும், போலந்திலும், யூகோஸ்லோவியாவிலும், அல்பானியாவிலும், ஜெர்மனியிலும், யூனைடைட் ஸ்டேஸ் அமெரிக்காவிலும், அர்ஜென்டினாவிலும், சீனாவிலும்,ஜப்பானிலும், மலாயாவிலும், சுமத்ராவிலும், ஜாவாவிலும், ஸூராபாயாவிலும், காஷ்கரிலும், இறைவனின் அருளினால் மிஷன்கள் நிறுவப்பட்டன. இந்த இடங்களில் சில முபல்லிஃக்மார்கள் தற்போது எதிரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் பணி செய்து கொண்டிருக்கின்றனர். மேலும், சில மிஷன்கள் போரின் காரணமாக அதாவது இரண்டாம் உலகப் போரின் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

சுருக்கமாக, இன்று அஹ்மதிய்யா இயக்கத்தைக் குறித்து அறியாத உலகின் எந்தவொரு சமுதாயமும் இல்லை. அஹ்மதிய்யத் என்பது ஒரு காட்டாற்று வெள்ளம் ஆகும்; அது தங்களது நாடுகளை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது என்பதை உணராத எந்தவொரு சமுதாயமும் இல்லை. ஆக, ரஷ்யாவில் நமது முபல்லிஃக் சென்றபோது, அவருக்கு கடினமான துன்பங்கள் கொடுக்கப்பட்டன. அவர் அடித்து உதைக்கப்பட்டார். மேலும், ஒரு நீண்ட காலம் வரை சிறையில் வைக்கப்பட்டார். ஆனால், அவன் இந்த இயக்கத்தை பரப்புவான் என்பதும், என் மூலமாக இதனை உலகின் மூலைகள் வரை பிரபல்யம் அடையச் செய்வான் என்பதும் இறைவனின் வாக்குறுதி ஆகும். எனவே அவன் தனது அருளினாலும், கருணையினாலும் இந்த இடங்களில் அஹ்மதிய்யத்தை சென்றடையச் செய்தான். இன்னும் கூறப்போனால், சில இடங்களில் பெரும், பெரும் ஜமாஅத்துகளை நிறுவிவிட்டான். (தஃவா முஸ்லிஹ் மவ்வூத் கே முத்அல்லிக் புர் ஷவ்கத் இஃலான், அன்வாருல் உலூம், தொகுதி 17, பக்கம் 155)

* * * * *

# முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஃபஸ்லே உமர் என்ற பெயர் ஏன் வைக்கப்பட்டது?

( எழுத்து: ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஓர் அடையாளமாக அவருடைய ஒரு பெயர் ஃபஸ்லே உமர் ஆகும் என்று எனக்கு இல்ஹாம் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இதன் பொருள் ஹஸ்ரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட அந்த சிறப்பு அம்சங்களைக் கொண்டு இவரும் அறியப்படுவார் என்பதே ஆகும். எனவே அந்த சிறப்பு அம்சங்களில் ஒன்று எத்தகையது என்றால், அது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்த மனிதரிடமும் காணப்பட முடியாது. அதாவது,

(1)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரண்டாம் வருகையின் காலகட்டத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இரண்டவாது கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டது. எவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக தேந்தெடுக்கப்பட்டார்களோ அதேபோன்று இவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இந்த அருள் அல்லது சிறப்புத் தன்மையானது எப்படிப்பட்ட ஒரு வலுவான மற்றும் வேறுபடுத்தி பார்க்க முடியாத ஒரு விஷயம் என்றால் இவரைப் போன்ற ஃபஸ்லே உமர் என்ற ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இரண்டாவது கலீஃபாவாக ஆனதற்கான பெருமையை பெறக் கூடிய ஒரு நபர் இதற்கு முன்பும் இருந்ததில்லை. இனியும் இந்த பதவியை பெறக் கூடிய ஒரு நபர் தோன்றவும் முடியாது. மூன்றாவது நான்காவது, ஐந்தாவது இருபதாவது என்ற அனைத்து எண்ணிக்கையிலும் கலீஃபாக்கள் இந்த இயக்கத்தில் இருந்து கொண்டே இருப்பார்கள். ஆனால், இந்த இரண்டாவது கலீஃபா மட்டும் தான் வர முடியாது. கைர் முபாயீன் எனும் பைஅத்தை புறக்கணித்தவர்களில் (அதாவது லாஹூரிகளில்) வர முடியுமா? என்றால் அவர்கள் கிலாஃபத்தை முற்றாக மறுக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். முஸ்லிஹ் மவ்வூத் என வாதிக்கும் சிலர் இருக்கின்றனர் என்றால் அவர்களுள் எந்தவொரு நபரும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கிலாஃபத்திலிருந்து மஸீஹ் மவ்வூத் அவர்களின் இரண்டாவது கலீஃபா என்ற அந்தஸ்தை பெறமுடியாது. மேலும் அவர்கள் ஒருபோதும் அவ்வாறான வாதம் புரியவுமில்லை. எனவே இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்காகவே அவர்களைக் குறித்தே கூறப்பட்ட ஒரு மாற்ற முடியாத வலுவான உறுதி வாய்ந்த அடையாளமாகும் என்பதில் எந்தவோர் ஐயமும் இல்லை.

மேலும், ஒரேயொரு நபரைத் தவிர வேறு எவரும் இந்த பதவிக்கான வாதத்தை செய்யவே முடியாது. மேலும் இந்தப் பண்புப் பெயரிலிருந்தே முஸ்லிஹ் மவ்வூத் யார்? என்பதை அறிய முடியும்! சிந்தித்துப் பார்த்தால் அப்படிப்பட்ட நான்கு உறுதியான அடையாளங்கள் உள்ளன.

(1) அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வித்திலிருந்தும், சந்ததியிலிருந்தும் வழித் தோன்றலாக இருப்பது.

(2) ஒன்பது வருட காலகட்டத்திற்குள் அன்னார்(ரலி) பிறந்தது.

(3) முதலாவது பஷீருக்கு பிறகு உடனடியாக அன்னார் (ரலி) பிறந்தது.

(4) மேலும், அன்னார் (ரலி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாக ஆனது.

(2)

இந்த குறிப்பிடத்தக்க சிறப்புகள் மட்டும் அல்லாமல் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட வேறு சில சிறப்பு அம்சங்களும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களிடமும் காணப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மிக அதிகமான வெற்றிகள் கிடைத்தனவோ மேலும் நாகரீகம் அடைந்த அதிகமான நாடுகளில் இஸ்லாமியப் படைகள் மற்றும் முபல்லிஃக்குகள் அங்கு அனுப்பப்பட்டதைப் போன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் காலத்திலும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் முபல்லிஃக்மார்கள் உலகின் அதிக நாடுகள் மற்றும் பூமியிலுள்ள அதிகப்படியான மூலை முடுக்குகள் வரை சென்றடைந்துள்ளார்கள். மேலும் இயக்கத்தின் அதிக புத்தகங்கள், செய்திகள், பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அன்னார் (ரலி) பரவச் செய்தார்கள். மேலும் அன்னாருடைய கிலாஃபத் காலகட்டத்தில் அஹ்மதிய்யத்திற்கு கிடைத்த வெற்றிகள், மேன்மை, வளர்ச்சி மற்றும் அருட்களின் தனிச் சிறப்புகளை எடுத்துரைப்பதற்கான தேவையில்லை. ஏனெனில், அந்த அளவிற்கு இவ்விஷயங்கள் தெளிவாக வெளிப்பட்டுள்ளன. மேலும், அன்னாரின் அறிவுக் கருவூலங்கள் மக்களின் ஆழ்ந்த தாகத்தை தணித்தன.

இதே போன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒரு கனவு இருக்கின்றது. அன்னார்(ஸல்) கூறுகின்றார்கள்: நான் கனவில் ஒரு கிணற்றைக் கண்டேன். அதில் ஒரு வாளி வைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வலுவிழந்த நிலையில் ஒன்றிரண்டு வாளி தண்ணீரை இறைத்தார்கள். அதன் பின் அந்த வாளி ஒரு தோலினால் உண்டான பெரிய உருளையாக மாறிவிட்டது. மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதிலிருந்து எந்த அளவிற்கு தண்ணீர் இறைத்தார்கள் என்றால் மனிதர்கள் மற்றும் ஒட்டகங்கள் அனைவருமே தாகத்தை தணித்துக் கொண்டனர்.

ஆக, இது ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் இருக்கும் இரண்டாம் ஒப்புமையாகும்.

(3)

அதேபோன்று ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் கனவில் இவ்வாறு கண்டேன்; அதாவது நான் பால் அருந்துகிறேன். எதுவரை என்றால் அந்த பால் என்னுடைய நகக் கண் வரை வந்து விட்டது. அதன் பிறகு நான் எஞ்சி இருந்த பாலை ஹஸ்ரத் உமர் பின் கத்தாபிற்கு கொடுத்து விட்டேன்.

ஹுஸூர்! இதனுடைய பொருள் விளக்கம் என்ன? என்று ஸஹாபா பெருமக்கள் கேட்டார்கள். அதற்கு, இதனுடைய பொருள் ஞானம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆக, எவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நபித்துவ ஞானத்தில் பங்கு பெற்றார்களோ அதேபோன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமருக்கும் பங்கு கிடைத்தது. மேலும், நண்பர்கள் மற்றும் எதிரிகளும் இந்த அற்புதத்தை பறைசாற்றுகின்றார்கள். அதை மிக விளக்கமாக கூறுவதற்கு அவசியம் இல்லை. இங்கு இதை மட்டும் நினைவில் வைப்பது போதுமானதாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணியில் இருந்த ஆற்றல் மற்றும் அன்னாரின் ஞானம் தொடர்பாக மேலே கூறியுள்ளோம். ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் நிலையும் அதைப் போன்றதே ஆகும். அன்னாரின் பௌதீக செயல்பாட்டின் ஆற்றல் மற்றும் அறிவுத் திறன் ரீதியிலான ஆற்றல் ஆகிய இரண்டும் காதியானில் வசிக்கின்ற ஒவ்வோர் அஹ்மதியின் பார்வையிலும் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது.

இதைக் குறித்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு சக்தி வாய்ந்த இரு ஆற்றல்களை கொண்ட ஒரு தூய மகன் உமக்கு வழங்கப்படும் என்ற இல்ஹாமில் கூறப்பட்டுள்ளது. அதன் பொருள் அவர் வெளிப்புறமான மற்றும் உட்புறமான ஞானத்தால் நிரப்பப்படுவார் என்பதாகும்.

(4)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்விஷயத்தின் மீதும் பெருமிதம் கொண்டிருந்தார்கள். அதாவது, அது தொடர்பாக அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் சில விஷயங்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்தால் என்னுடைய அந்த விண்ணப்பத்திற்கு பிறகு என்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப திருக்குர்ஆன் வசனங்களும் இறங்கின. அதில் ஒன்றுதான் பர்தா தொடர்பான வசனமும் ஆகும்.

ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் வயதோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய காலகட்டத்தில் ஆலோசனை கூறுவதற்கான வயதாக இருக்கவில்லை. ஆனாலும், இறை

அறிவிப்பு (இல்ஹாம்) பெறுவதற்கான ஓர் அம்சம் இங்கும் காணப்படுகின்றது. அதற்கான உதாரணம் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் கண்ட இந்த கனவு காட்சியாகும். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு

اِنِّيْ مَعَ الْاَفْوَاجِ اٰتِيْكَ بَغْتَةً

என்ற இல்ஹாம் இறங்கியதாக அன்னார் (ரலி) கண்டார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, உண்மையில் இன்று இரவு எனக்கு இவ்வாறு இல்ஹாம் இறங்கியது என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

ஆக, எவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் தோன்றக் கூடிய ஆன்மிக சிந்தனையானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஹீயின் வெளிப்பாடாக இருந்ததோ அதேபோன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் கனவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வஹீயின் தோற்றத்தில் வெளிப்பட்டது. இது நான்காவது ஒப்புமையாக இருந்தது.

(5)

ஐந்தாவது ஒப்புமை என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இவ்வுலகிலேயே அன்னார் சொர்க்கத்திற்குரியவர் என்ற நற்செய்தியை வழங்கினார்கள். அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) தம்முடைய பிள்ளையாக இருந்ததன் காரணத்தினால் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களுக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை இவ்வுலகிலேயே வழங்கி விட்டார்கள்.

இது தொடர்பாக அன்னார் (அலை) இவ்வாறு கூறுகின்றார்கள்: பஹிஷ்தி மக்பராவில் சேர்வதற்கு என் தொடர்பாகவும், என்னுடைய மனைவி மக்கள் தொடர்பாகவும் இறைவன் விதிவிலக்கு அளித்துள்ளான். மேலும், எவர் இது தொடர்பாக முறையீடு செய்வாரோ அவர் நயவஞ்சகர் ஆவார். இதன் பொருள் எல்லாம் வல்ல இறைவன் என்னுடைய மனைவி மற்றும் என்னுடைய சந்ததிகள் சொர்க்கவாசிகள் ஆவார்கள் என்பதாகும்; அவர்கள் சொர்க்கத்திற்குரியவர்கள் என்பதற்கான அந்தச் செய்தி அவன் புறமிருந்து எனக்கு கிடைத்து விட்டது என்பதாகும்.

இது மட்டுமில்லாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு குறிப்பாக சொர்க்கத்திற்கான நற்செய்தி ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் பிறப்பதற்கு முன்பே இல்ஹம் மூலமாக அறிவிக்கப்பட்டு விட்டது. இதன் பொருள் மவ்லவி மிஸ்ரியினுடைய கூற்றுக்கு மாறாக வாக்களிக்கப்பட்ட மகனின் முடிவு நல்லதாக அமையும்; மேலும், அவருடைய ஆன்மா விண்ணில் உயர்த்தப்படும் என்பதாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தை கூறுவதும் அவசியமானதாகும்.ஜமாஅத்தில் உள்ள பிற மக்கள் அனைவருக்கும் இது பஹிஷ்தீ மக்பராவாக (சொர்க்கத்தின் மண்ணறை) இருக்கிறது;ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு இது குடும்ப மண்ணறையாகும்.ஏனெனில், அவர்கள் புறமிருந்து எந்த ஒரு வஸிய்யத்திற்கான தொகையும் செலுத்தப்படவில்லை என்று கைர் முபாயீன்கள் (அதாவது லாஹூரிகள்) கூறுகின்றனர். இதற்கான பதிலில் இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும்: அதாவது ஹுஸுர் (அலை) அவர்கள் பஹிஷ்தி மக்பராவிறகு அடித்தளம் அமைத்த அந்த சந்தர்ப்பத்தில் தம்முடைய சொத்திலிருந்து அப்போதைய மதிப்பீட்டின் படி ஓராயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை சந்தாவில் அதாவது வஸிய்யத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் செலுத்தி விட்டார்கள். அன்னாருக்கு சுயமே வஸிய்யத் (உயில்) செய்ய வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை. ஏனெனில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சொர்க்கவாசி என்பதே (அஹ்மதி மற்றும் லாஹூரி) இரு பிரிவினர்களின் ஒருமித்த கருத்தாகும். ஓராயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை ஹுஸுர் (அலை) அவர்கள் தன்னுடைய குடும்பத்தார் சார்பாகவே வழங்கியிருந்தார்கள்.

(6)

ஆறாவது ஒப்புமை என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) ஆகியோரின் குணாதிசயங்களில் காணப்படுகின்ற ஒப்புமை ஆகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மார்க்கத்திற்காக வெளிப்படுத்திய தன்மான உணர்வையும் கம்பீரத்தையும் அறியாதவர் யார் தான் இருக்க முடியும்? அதேபோன்று இங்கும் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறான இல்ஹாம் உள்ளது:

அவருடைய வருகை மிகவும் அருளுக்குரியதாகவும் இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணியாகவும் அமையும். மேலும், இறைவனுடைய கருணையும், தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பி இருக்கின்றது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்றே மார்க்க விவகாரத்தில் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் தன்மான உணர்வு மற்றும் கம்பீரத்தை வெளிப்படுத்தியது அன்னாரின் ஒரு தெளிவான சிறப்பு அம்சமாகும் என்பதை ஜமாஅத்தில் உள்ள அனைத்து மக்களும் அறிந்து இருக்கின்றனர்.

(7)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) ஆகிய இருவருக்கும் இடையில் காணப்படுகின்ற ஏழாவது ஒப்புமை என்னவென்றால் அன்னாரும் முஹத்திஸ் (இறைவனுடன் உரையாடக் கூடியவர்) ஆகவும் முல்ஹிம் (இறை அறிவிப்பு பெறுபவர்) ஆகவும் இருந்தார்கள்.

நாம் அவரிடத்தில் எமது ஆவியை ஊதுவோம் (இறை உரையாடல்களை வழங்குவோம்) என்று அன்னாரைக் குறித்து இறைவன் கூறியுள்ளான்.

அதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முந்தைய சமுதாயங்களின் முஹத்திஸீன்களைப் போன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் ஒரு முஹத்திஸ் மற்றும் முல்ஹிம் ஆவார்கள்.

எனவேதான் பல திருக்குர்ஆன் வசனங்களில் உள்ள கருத்துகள் முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய உள்ளத்தில் இறங்கின. பிறகு திருக்குர்ஆனிலும் வஹீயின் வடிவில் இறங்கியன. இதனால் அன்னாரின் சில கனவுகளும் ஆன்மிக காட்சிகளும் பிரசித்தி பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்குப் பிறகு உடனடியாக அடுத்தப்படியாக வேறு ஒருவர் நபியாக வருவாரே என்றால் அது உமரே ஆவார் எனவும், நான் (நபியாக) அனுப்பப்படாமல் இருந்திருந்தால் உமர் (நபியாக) அனுப்பப்பட்டிருப்பார் என்றும் கூறினார்கள்.

இந்த அனைத்து விஷயங்களும் நபித்துவத்தின் ஒளி, இல்ஹாமிய இயல்பு மற்றும் வஹீக்குரிய தகுதி போன்ற ஆற்றல்களின் அத்தாட்சியாக இருக்கின்றது. மேலும், இதே விஷயங்களை தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் உள்ள மக்களும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களிடம் எப்போதும் கண்டு வந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நபர் தன்னுடைய மாட்டுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஏற்பட்ட களைப்பினால் அவர் அந்த மாட்டின் மீது ஏறி அமர்ந்துக் கொண்டார். அப்போது அந்த மாடு அவரிடம் நாங்கள் விவசாயத்தின் பயன்பாட்டிற்காக படைக்கப்பட்டுள்ளோம்; சவாரிக்காக அல்ல என்று கூறியது. இதைக் கேட்ட ஸஹாபா பெருமக்கள் ஸுப்ஹானல்லாஹ்! மாடுகளும், காளைகளும் கூட பேசுமா? என வினவினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதை நான் நம்புகின்றேன்; இன்னும்கூறுவதாயின் அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) அவர்களும் கூட இதை நம்புகின்றனர் என்று பதிலளித்தார்கள். ஆனால், அவர்கள் இருவருமே அந்த சபையில் இருக்கவில்லை.

இந்த ஹதீஸிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரும் ஆன்மிக காட்சியை காணக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதாகும். ஏனெனில், மாடு பேசியது தொடர்பான அனைத்து விஷயங்களும் ஆன்மிக நிலையில் இருந்தன. இதற்கான ஆதாரம் என்னவென்றால், ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் (ரலி) ஜுமுஆ உரை நிகழ்த்தியவாறே, யா ஸாரியதல் ஜபல்!யா ஸாரியதல் ஜபல்! என்று உரத்த குரலில் விளித்தார்கள். அங்கிருந்த மக்கள் வியப்படைந்தனர். மேலும், ஜுமுஆ




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

தொழுகைக்குப் பிறகு இது தொடர்பாக கேட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நான் இஸ்லாமியப் படை போர்க் களத்தில் மிகுந்த துன்பத்தில் இருப்பதைக் கண்டேன்; அத்துடன் அவர்கள் அருகில் உள்ள மலை அடிவாரத்திற்கு சென்று அடைக்கலம் பெற்றால், அவர்கள் தப்பித்து விடுவார்கள் என்ற அந்தக் காட்சியையும் நான் கண்டேன். எனவேதான் நான் படையின் தலைவர் ஸாரியாவை விளித்து மலையின் பக்கம் அடைக்கலம் தேடுங்கள்! மலையின் பக்கம் அடைக்கலம் தேடுங்கள்! என்று கூறினேன் என்றார்கள். சிறிது காலம் கழித்து அந்தப் படை மதீனா வந்தடைந்ததும் அம்மக்கள் எதிரிகள் எங்களை முற்றுகையிட்டு விட்டார்கள். ஆனால், அப்போது, ஸாரியாவே! மலையின் பக்கம் சென்று அடைக்கலம் தேடிக் கொள்! என்ற ஓசை வந்தது. அவ்வாறே நாங்கள் அங்கு சென்றவாறு அழிவிலிருந்து பாதுகாப்பு பெற்றோம் என்று கூறினர்.

எனவே இந்த கஷ்ஃப் (எனும் ஆன்மிகக் காட்சி) என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆன்மிகக் காட்சியை காணக் கூடியவராக இருந்தார்கள் என்பதற்கு ஒரு பிரசதி பெற்ற சான்றாகும். அதேபோன்று பாங்கில் கூறப்படக் கூடிய சொற்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மூலமாகத்தான் முஸ்லிம்களாகிய நமக்கு கிடைத்தது. எனவே அன்னார் சுயமே முஹத்திஸ்ஸாகவும், முல்ஹிமாகவும், ஆன்மிகக் காட்சி காணக் கூடியவராகவும் இருந்தார்கள் என்பதால் அன்னாருக்கு மாடு பேசுவதையோ அல்லது ஓநாய் பேசுவதையோ ஒப்புக் கொள்வதில் என்ன கடினம் இருந்திருக்க முடியும்? ஆனால், பொது மக்களுக்கு இந்த விஷயம் உள்ளபடியே புரியப்பட வேண்டிய விஷயமாக இருந்தது.

அதேபோன்று நம்முடைய ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் குழந்தை பருவத்திலிருந்தே ஆன்மிகக் காட்சி, கனவுகள் மற்றும் இல்ஹாம் பெறக் கூடியவராக இருந்தார்கள். அனனாருக்கு 1914-ல் வந்த யுமஸ்ஸக்கன்னஹூம் என்ற அந்த ஒரே இல்ஹாம் இன்று வரை சம்மட்டியைப் போன்று லாஹூரி பிரிவினர்களை துண்டு துண்டாக தகர்த்து நிரந்தரமாக அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி விட்டது. மேலும், இந்த இரண்டாம் உலகப் போர் துவங்கியதிலிருந்து இந்த இயக்கம் வியக்கத் தக்க வகையிலும்,தனித்துவத்தோடும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இது ஏழாவது ஒப்புமை ஆகும்.

(8)

ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) ஆகிய இருவருக்கும் இடையில் காணப்படும் எட்டாவது ஒப்புமை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ اللّٰهَ وَضَعَ الْحَقَّ عَلٰى لِسَانِ عُمَرَ

அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நாவில் நீதியை வைத்துள்ளான்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது: இறைவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவு மற்றும் உள்ளம் ஆகிய இரண்டிலும் நேர்மையை வைத்துள்ளான். அவ்வாறே ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் தொடர்பாகவும் இறை இல்ஹாமில் அல்லாஹ் கூறுகின்றான்:

مَظْهَرُ الْحَقِّ وَالْعَلَاءِ

جَاءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ

அவர் உண்மை மற்றும் மேன்மையின் வெளிப்பாடாக இருப்பார். மேலும், உண்மை தனது எல்லா அருட்களுடனும் வந்து விடுவதற்காகவும் பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் வெருண்டோடி விடுவதற்காகவும் அவரது வருகை அமையும் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

فَمَاذَا بَعْدَ الْحَقِّ إِلَّا الضَّلَالُ

இது எட்டாவது ஒப்புமை ஆகும்.

(9)

ஒன்பதாவது ஒப்புமை மார்க்கத்துடன் தொடர்புடையதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அது தொடர்பாக அன்னார் (ஸல்) கூறினார்கள். அதில் மக்கள் எனக்கு முன்னால் சமர்பிக்கப்பட்டார்கள். அவர்கள் மேலங்கியை அணிந்திருந்தார்கள்.சிலருடைய மேலங்கி நெஞ்சுப் பகுதி வரை இருந்தது. சிலருடைய மேலங்கி அதை விட சிறியதாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு நீளமான மேலங்கி அணிந்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் கொண்டு வரப்பட்டார்கள். அந்த மேலங்கி எந்த அளவிற்கு நீளமானதாக இருந்தது என்றால், தரையை தேய்த்துக் கொண்டு இருந்தது. ஹுஸூர்! இந்த கனவிற்கான விளக்கம் என்ன? என்று ஸஹாபா பெருமக்கள் கேட்டபோது, இது மார்க்கம் ஆகும் என அன்னார் (ஸல்) பதிலளித்தார்கள்.

அவ்வாறே இங்கும் இதே நிலைதான். ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களுக்கும் எந்த அளவிற்கு மார்க்கம் மற்றும் திருக்குர்ஆனின் ஆழிய ஞானங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை பாருங்கள்! ஒவ்வொரு ஜல்ஸாவிலும் வரக்கூடியவரும், ஒவ்வொரு மஜ்லிஸிலும் கலந்து கொள்கின்றவரும், ஒவ்வொரு குத்பாவை கேட்கின்றவரும் அன்னாரின் புத்தகங்கள் மற்றும் திருக்குர்ஆன் விளக்கவுரையை ஆய்வு செய்கின்ற ஒவ்வொருவரும் இந்த நபர் மார்க்கம் மற்றும் இறை வேதத்தின் ஞானத்தினால் உச்சி முதல் உள்ளங்கால் வரை நிறைந்து காணப்படுகின்றார் என்ற நம்பிக்கையில் திகைத்து விடுவார்.

(10)

பத்தாவது ஒப்புமை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இவ்வாறு துஆ செய்திருந்தார்கள்;

அல்லாஹ்வே! அபூஜஹலை முஸ்லிமாக்கியோ அல்லது உமர் இப்னு கத்தாப் அவர்களை முஸ்லிமாக்கியோ இஸ்லாத்திற்கு கண்ணியத்தை வழங்கி வெற்றி பெறச் செய்வாயாக!

எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை இறைவன் முஸ்லிமாக ஆக்கிவிட்டான். அதன் காரணமாக இஸ்லாத்திற்கு சில உதவிகள், மேன்மைகள் மற்றும் வெற்றிகள் உடனே வெளிப்பட்டது. ஆனால், பிற்காலத்தில் அன்னாருடைய கிலாஃபத்தின் காலத்தில் எந்த அளவிற்கு இஸ்லாம் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தியது என்றால் அவை அனைத்தையும் இங்கு எடுத்துரைக்க இயலாது. அதேபோன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நாற்பது நாட்கள் செய்த துஆக்களின் விளைவாகவே பிறந்தார்கள். இது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: என்னுடைய சந்ததிகள் மூலமாக இறைவன் இஸ்லாத்தின் வெற்றி மற்றும் உதவிக்கான அடித்தளத்தின் வாக்குறுதியை அளித்துள்ளான். அந்த வாக்குறுதியையும் நாம் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் மிகத் தீவிரமாக முழுமையடைவதை கண்டு விட்டோம். ஃபல்ஹம்து லில்லாஹி அலா தாலிக்.

(11)

மேற்கூறப்பட்ட விஷயங்கள் மட்டுமின்றி ஜமாஅத் அமைப்பை நிறுவுதல், சமுதாயத்தின் ஒவ்வொரு துறைகளையும் தனித்தனியாகப் பிரித்தல், மஜ்லிஸே ஷூராவை நிறுவுதல், ஹிஜ்ரி ஷம்ஸியை (சூரிய வருடத்தை) நடைமுறைப்படுத்தியது, ஜமாஅத்தினுடைய பல துறையில் மக்கள் தொகை கணக்கீட்டை ஆரம்பித்தல், கவிதைக்கான ஆர்வம், உரை நிகழ்த்துவதற்கான ஆற்றல், அரசியல் திட்டமிடுதல், பெண்களின் உரிமைகள், மார்க்க போதனைக்கான (வாகிஃபீன்) வாழ்வை அர்ப்பணிக்கக் கூடியவர்களுக்கான அமைப்பை நிர்வகித்தல் போன்ற சிறப்பான பணிகள் இருக்கின்றன. இவையும், இவற்றைப் போன்ற இன்னும் எண்ணற்ற விஷயங்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்றே இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் ஒப்பற்ற சிறப்புகளில் அடங்கும்

.

தமிழாக்கம்
மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

* * * * *

# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவம்

## (மவ்லவி ஹஸ்ரத் ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதில் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு ஒரு மாபெரும் அடையாளம் ஆகும். அன்னாருடைய மேலும் பல அடையாளங்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் துஆ மூலமாக வெளிப்பட்டன. உதாரணமாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு வலுவான அடையாளமாக தன் இருப்பின் அடிப்படையில் லேக்ராம் பற்றிய அடையாளம் இருக்கின்றது தான். ஆயினும், முஸ்லிஹ் மவ்வூத் அடையாளம் வெளிப்பட்டது என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆக்களில் மிகப் பெரிய வித்தியாசத்தை கொண்டதாக இருக்கின்றது. இந்த அடையாளத்திற்காக ஹுஸூர் (அலை) அவர்கள் சிறப்பான ஏற்பாட்டின் அடிப்படையில் 40 நாட்கள் தம்முடைய ஊரிலிருந்து வெளியூருக்குச் சென்று தனிமையில், உலகத்தில் இருந்து தம்மை துண்டித்தவாறு இறைவனின் சன்னிதியில் விழுந்து மன்றாடி பிரார்த்தனை மற்றும் திக்ரில் மூழ்கி இருந்தார்கள். இதன் நல்விளைவாக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்காக தன்னுடைய அருளின் அடையாளத்தை வழங்கினான். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதலின் நல்விளைவாக வேறு பல அடையாளங்களும் வெளிப்பட்டன. அவை அனைத்தும் தத்தமது இடத்தில் சிறப்பிற்குரியது தான். ஆனால் இந்த அடையாளத்தின் விளைவு எவ்வாறு விரிவானதாக இருக்கின்றது என்றால் அதை கணிப்பது சாத்தியமற்றதாகும்.

இவ்வாறான அடையாளங்கள் உலகத்தின் வரலாற்றில் துஆவின் மூலமாக மூன்று முறை வெளிப்பட்டிருக்கின்றன.

(1) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வருகையின் அடையாளம். அது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவின் விளைவால் வெளிப்பட்டது ஆகும். இந்த அடையாளம் தலைப்பின் அடிப்படையில் முதல் தரத்தை கொண்டதாக உள்ளது.

(2) இரண்டாவது அடையாளம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வெளிப்பாடு ஆகும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய சமுதாயத்திற்காக செய்த துஆவினால் வெளிப்பட்டதாகும்.

(3) துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் விளைவினால் உலகில் வெளிப்பட்ட மகத்துவ மிக்க மூன்றாவது அடையாளம் என்பது முஸ்லிஹ் மவ்வூத் அவர்கள் வெளிப்பட்ட அடையாளம் ஆகும். இந்த அடையாளம் தன்னுடைய மகத்துவத்தின் அடிப்படையில் மூன்றாவது இடத்தில் இருக்கின்றது.

இந்த மூன்றாவது துஆவின் விளைவினால் பிறக்கக் கூடிய அந்த மனிதர் எவ்வளவு பெரும் மகத்துவ மிக்கவராக இருக்கின்றார்! இதனை பல நாட்கள் செய்யப்பட்ட துஆவிற்கு பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் மீது ஹோஷியார்பூரில் இறங்கிய இறைவனுடைய அந்த வார்த்தைகளிலிருந்து நாம் கணித்துக் கொள்ள முடியும். அது பிப்ரவரி 20-ம் தேதி பிரசுரமாக வெளியிடப்பட்டது. இறைவனுடைய வார்த்தைகளில் மிகைப்படுத்துதல் இருக்க முடியாது.

ஆகையால், நாம் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவத்தைக் குறித்து சரியாக கணிக்க வேண்டும் என்றால் நாம் அந்த முன்னறிவிப்பை படித்துப் பார்க்க வேண்டும். முன்னறிவிப்பில் அந்த மனிதருடைய பண்புகள், சிறப்பம்சங்கள், பணிகள் ஆகியவை படம் பிடித்து காட்டப்பட்டுள்ளன. ஆகையால், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) ஆகியோருக்கு பிறகு துஆவின் மூலமாக உலகத்தில் வெளிப்பட்ட மூன்றாவது மகத்துவ மிக்க மனிதர் முஸ்லிஹ் மவ்வூத் ஆவார்கள்.

அவரைக் குறித்து முன்னறிவிப்பின் சொற்களில் கூறப்பட்டுள்ளன. அந்த முன்னறிவிப்பிற்கு உரியவர் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)அவர்களைத் தவிர வேறு எவரும் இல்லை என்பது அடையாளங்கள் மற்றும் ஆதாரங்கள் மூலமாக நிரூபணம் ஆகுவது மட்டுமல்லாமல் உரத்த குரலில் இறைவனுடைய அருட்களும் இந்த விஷயத்திற்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன. ஏனெனில், அல்லாஹ் தன்னுடைய வல்லமையின் வெளிப்படுத்தும் விதமாக அந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்த அனைத்து விஷயங்களையும் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு ஆதரவாக எவ்வாறான விதத்தில் முழுமைப்படுத்தினான் என்றால் மேலும் முழுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்றால் அதை எந்தவொரு நடுநிலையான மனிதனாலும் மறுக்க இயலாது. இதில் உள்ள அனைத்து விஷயங்களையும் முழுமைப்படுத்துவது என்பது மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாகும். இறைவனால் தான் அவ்வாறு செய்ய முடியும். அவன் இந்த அனைத்து விஷயங்களையும் முழுமைப்படுத்தியவாறு இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்த தோன்ற இருந்த அந்த நபர் மஹ்மூத் அவர்களே ஆவார்கள் என்று விண்ணிலிருந்து சான்று பகர்ந்தான். ஆகையால் ஒரு நபருடைய உண்மைத்துவத்திற்கான மிகப் பெரிய சான்று அல்லாஹ்வினுடைய செயல் சாட்சியமாகும். இந்த அடையாளம் இந்த இடத்தில் மிகவும் தெளிவான வடிவில் இடம் பெற்றிருக்கின்றது.

ஹஸ்ரத் மஹ்மூத் (ரலி) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூத் ஆவார்கள் என்பதற்கு மற்றுமொரு விஷயம் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றது. அது அன்னாருக்கு முன்னர் தோன்றிய வாக்களிக்கப்பட்டவர்களுடன் இருந்த இறைவனுடைய நடைமுறை ஆகும். இறைவன் புறம் இருந்து வாக்களிக்கப்பட்டவர்கள் உலகத்தில் சீர்திருத்தத்திற்காக வந்து கொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் தொடர்பாக இறைவனின் நடைமுறையும் இவ்வாறு இருந்து வருகின்றது. அவருடைய சமுதாயத்தின் பிரபலமான நபர்கள் அவருக்கு எதிராக நிற்கின்றார்கள். மேலும், அவர்கள் அவரை செயல்பட விடாமல் தடுப்பதற்காக தங்களுடைய முழு முயற்சியையும் மேற்கொள்கின்றார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய காலத்தின் மிகப் பெரிய மனிதன் ஃபிர்அவ்ன் ஆவான். அவன் அன்னாருக்கு எதிராக நின்றான். மேலும் அவன் ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் அன்னாருடைய சமுதாயத்தை அழிப்பதற்காக முயற்சி செய்தான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய காலத்தில் யூதர்களில் மிகப் பெரிய நபராகவும், அவர்களுடைய தலைவனாகவும் ஒரு சூனியக்காரன் இருந்தான். அவனுடைய பெயர் காயிஃபா ஆகும். அவன் அன்னாரை தோல்வியுறச் செய்ய வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தான்.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கா நகரத்தின் தலைவன் அபூஜஹில் இருந்தான். அவன் அன்னாரை எதிர்க்க வேண்டும் என்று எழுந்து நின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் முஸ்லிம்களின் தலைவனான மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மற்றும் நஸீர் உசேன் தஹ்லவி போன்றோர் எதிர்ப்புக்கான மேடையில் ஏறி நின்றதன் காரணத்தினால் இறைவனுடைய இல்ஹாமில் ஃபிர்அவ்ன் மற்றும் ஹாமான் என்ற பெயர்களை பெற்றனர். இதேபோன்று இறைவனுடைய பழைய நடைமுறைக்கு ஏற்றவாறு மஹ்மூத் (ரலி) அவர்கள் எழும் நேரம் வந்தபோது, முந்தைய நல்லடியார்களின் காலத்தில் அவர்களின் காலத்து பெயர் தாங்கி நபர்கள் எதிராக நின்றது போன்று அப்பொழுது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் உயர் இடத்தில் இருந்த நபர்கள் அன்னாருக்கு எதிராக நின்றனர். இப்பொழுது நிற்க உள்ள நபர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் முன்னறிவிப்பு செய்த அதே வாக்குறுதி அளிக்கப்பட்ட நபர் ஆவார் என்று தங்களுடைய செயல் ரீதியாக அவர்கள் அறிவிப்பு செய்தனர்.

மேலும், ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் உண்மையான மகத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு விஷயம் என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றம் அன்னாரின் பிறப்புடன் இணைந்துள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்பாக எவர்கள் எல்லாம் நல்லெண்ணம் கொண்டிருந்தார்களோ மேலும், அன்னாரின் எழுத்துகள் மற்றும் முன்னறிவிப்புகளின் அடையாளத்தால் எவர்கள் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தார்களோ அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் படைப்பினத்தின் சீர்திருத்தத்திற்காக தோன்றியுள்ளார்கள் என்று எண்ணினர். அதனால் திரும்ப திரும்ப தங்களுடைய பைஅத்தில் எங்களை இணைந்து கொள்ளுங்கள் என்று அவர்கள் விண்ணப்பம் வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், இப்பொழுது வரை பைஅத் வாங்க எனக்கு கட்டளை இல்லை என்று அன்னார்

(அலை) அவர்கள் எப்பொழுதும் பதில் கூறிவந்தார்கள். மேலும், இறைவன் புறமிருந்து பைஅத் வாங்க கட்டளை வராத வரை நான் யாரிடமும் பைஅத் வாங்க மாட்டேன் என்றார்கள். ஆனால், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) பிறந்தபோது, அன்னாருக்கு பைஅத் வாங்க இறை இல்ஹாம் மூலம் கட்டளை வந்தது. மேலும்,

اِصْنَعِ الْفُلْكَ بِاَعْيُنِنَا وَوَحْيِنَا

என்ற இந்த வஹீ இறங்கியது. இவ்வாறு பிரசுரத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறந்த செய்தி வெளிப்பட்டது. மேலும், மக்களுக்கு பைஅத் செய்ய அழைப்பு விடுத்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறக்காத வரை பைஅத்தின் பணியை இறைவன் காலதாமதாக ஆக்கினான். இவ்வாறு அன்னாரின் பிறப்பு நிகழ்ந்த உடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்ட கட்டளை வந்தது. இவ்வாறு அன்னாரின் பிறப்புடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்பம் நிகழ்ந்தது. இந்த வாக்களிக்கப்பட்ட மகனுக்கு இறைவனுடன் ஆழமான தொடர்பு உள்ளது என்பதன் சைகை இதில் இடம் பெற்றுள்ளது. ஏனெனில், இரண்டின் ஆரம்பமும் ஒன்றாக நிகழ்ந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இருப்பு பின்னிப் பிணைந்துள்ளது. இரண்டையும் வெவ்வேறாக எண்ண முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இறுதியாக, நான் இந்த விஷயத்தையும் தெளிவுபடுத்தி விடலாம் என்று நினைக்கின்றேன். அதாவது நீங்கள் ஹஸ்ரத மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு அன்னாரின் மூலமாக நிறைவேறியுள்ளது; மேலும், அன்னாருடைய இருப்பு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு சான்றாக இருக்கின்றது; மேலும் அன்னாரின் மூலமாக நாம் இஸ்லாத்தின் எதிரிகள் மீது சான்றை முழுமைப்படுத்த முடியும் என்று நாங்கள் அஹ்மதி அல்லாத நபர்களிடம் கூறுகின்றோம். அதைப் போன்று கைர் முபாயீன் (பைஅத்திலிருந்து வெளியேறியவர்) களிடமும் நாங்கள் கூறுகின்றோம்; அல்லாஹ் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு மகத்துவ மிக்க முன்னறிவிப்பை நிறைவேற்றி உள்ளான்;மேலும் அன்னாரின் உண்மைத்துவத்திற்கு ஒரு வல்லமை மிக்க அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளான்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று வாதிக்கின்ற உங்கள் மீது கடமையாகும். அதாவது நீங்கள் இந்த அடையாளத்தின் உண்மைத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வல்லமை மிக்க முன்னறிவிப்பை தனித்தன்மை வாய்ந்த வடிவில் நிறைவேற்றியவாறு அன்னாருடைய உண்மைத்துவத்திற்கு எவ்வாறு ஓர் அற்புதமான சான்றை வழங்கியுள்ளான் என்பதை பாருங்கள்! என உலகத்திற்கு கூறுங்கள்! இது ஒரு வலுவான சான்று ஆகும். இதற்கு முன்பு இறை நேசத்துடனும், இறையச்சத்துடனும் சிந்திக்கக் கூடிய ஒவ்வொருவரின் கழுத்தும் குனிந்து விடுகின்றது. ஆனால் நீங்கள் காழ்ப்புணர்ச்சி மற்றும் பிடிவாதத்தின் காரணத்தினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒளி வீசக் கூடிய இந்த அடையாளத்தை மறுத்தீர்கள் என்றால், பின்னர் இறைவனின் பார்வையில் அந்த அஹ்மதி அல்லாதவர்களைப் போன்று நீங்களும் குற்றமிழைத்தவர்களாக இருப்பீர்கள். அதாவது, எந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறியதோ மேலும் எந்த மஸீஹ் மவ்வூதின் இருப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு வலுவான சான்றாகவும், சாட்சியாகவும் இருக்கின்றதோ அந்த மஸீஹ் மவ்வூதை அவர்கள் நிராகரித்து இறைவனின் பார்வையில் குற்றமிழைத்தவர்களாக ஆகியுள்ளனர். (பைகாமீகளாகிய) நீங்கள் இந்த வாக்களிக்கப்பட்ட சீர்திருத்த வாதியை நிராகரித்தால் பின்னர் அவர்களைப் போன்று நீங்களும் இறைவனின் பார்வையில் குற்றமிழைத்தவர்களாக ஆகிவிடுவீர்கள்.

(அல்ஃபஸ்ல் பிப்ரவரி 20, 1994 )

தமிழாக்கம்
மவ்லவி எம். ஷஹாபுதீன்

* * * * *

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு வழிகாட்டல்**

16-ம் பக்கம் தொடர்ச்சி....

உணர்வுகளுக்கு எந்தவொரு துயரமும் நேர்ந்து விடக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது. இதை விட அதிகமாக எதுவும் செய்யக் கூடாது. இதை விட அதிகமாக வேறு ஏதாவது செய்தால் அது பித்அத்தில் அடங்கும். மேலும், அதில் மரணிக்கின்றவர்களுக்கு எந்தவொரு கண்ணியமும் இருப்பதில்லை. மாறாக, நான் மேலே விளக்கமாக கூறியது போன்று அதில் அவர்களுக்கு வேதனைதான் இருக்கின்றது. மேலும் இப்படிப்பட்ட பித்அத்களின் முடிவு ஒருபோதும் சிறந்ததாக இருந்ததில்லை. கபர்களை தரிசிப்பதற்கான நோக்கம் இது மட்டுமாகத் தான் இருக்க வேண்டும். அது மரணிக்கின்றவர்களின் பாவமன்னிப்பு மற்றும் அவர்களுடைய உயர்ந்த அந்தஸ்திற்காக துஆ செய்ய வேண்டும். நேர்மையான நோக்கங்களில் வெற்றி பெறுவதற்காக தன்னுடைய விண்ணின் எஜமானன் முன்பு கையேந்த வேண்டும். அவர்களின் மனைவி மக்கள் மற்றும் குடும்பத்தாரின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக இறைவன் முன்னிலையில் துஆ செய்ய வேண்டும். மேலும், தன்னுடைய மரணத்தை நினைவு கூர்ந்தவாறு நல்ல முடிவிற்காக நீண்ட துஆ செய்ய வேண்டும்.

கபர்களை ஸியாரத் செய்வதன் ஒரு நோக்கம் அரசியலாகவும் இருக்கின்றது. அது என்னவென்றால், பல சமுதாய மக்கள் தங்களுடைய தோற்றுனர்கள் மற்றும் சில குறிப்பிட்ட தலைவர்களின் கபர்களை பிற சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு வந்து தமது நல்லெண்ணம் மற்றும் மரியாதையின் மலர்களை அணிவிக்கும் வகையில் கட்டுகின்றார்கள். மேலும் இந்த நடைமுறையானது சமுதாயத்திற்கு மத்தியில் உள்ள பரஸ்பர தொடர்பை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால், இதுபோன்ற தரிசனத்தின் உண்மையான நோக்கம் துஆவாக இருப்பதில்லை என்பது வெளிப்படையான ஒன்றே ஆகும். (மாறாக தரிசிக்க வருபவர்கள் துஆ செய்யக் கூடியவர்களாகவே இருப்பதில்லை). சமுதாயம் மற்றும் அரசியல் நோக்கத்திற்கான பெருமை மற்றும் தற்புகழ்ச்சியை வெளிப்படுத்துவதே அதன் நோக்கமாக இருக்கின்றது. இவ்வாறான சூழலில் உலகின் நடைமுறை என்னவென்றால், பெரிய, பெரிய மக்கள் வெளிநாடுகளுக்கு செல்லும்போது அந்த நாட்டினுடைய தோற்றுனர் அல்லது வேறு சிறப்பு விருந்தினர்களின் கபர்களுக்கு சென்று மலர்களால் அலங்கரிக்கப்பட்ட போர்வையை அணிவிப்பார்கள். இது ஓர் அரசியல் நடைமுறையாகும். இதற்கு இந்த மார்க்க ஃபத்வாக்களுக்களுடன் எந்தவொரு தொடர்பும் இல்லை.வல்லாஹு அஃலம்

. (அல்ஃபஸ்ல், ஆகஸ்ட் 28, 1985)

தமிழாக்கம்
மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

* * * * *

# கபரின் மீது மலர் மாலை அணிவிப்பது தொடர்பாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு வழிகாட்டல் மற்றும் அந்த வழிகாட்டலில் உள்ள ஞானம்

## (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் எம்.ஏ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

சில நாட்களுக்கு முன்பு நஸாராத் இஸ்லாஹ் வ இர்ஷாத் ரப்வா சார்பாக ஆகஸ்ட் 12-ம் தேதியிட்ட அல்ஃபஸ்ல் பத்திரிகையில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) கபரின் மீது மலர்களை அணிவிப்பது தொடர்பாக வெளிவந்தது. இந்த ஃபத்வா தன்னுடைய நிலையில் மிகவும் சிறந்ததாகும். ஆனால், இந்த ஃபத்வா ஒரு குறிப்பிட்டக் கருத்தை கருத்தில் கொண்டவாறு கொடுக்கப்பட்டதாகும். ஏனெனில், இந்த ஃபத்வாவை கேட்டவர் இறந்தவரின் ஆன்மா மனநிறைவு பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் கபர் மீது மலர் மாலை அணிவிப்பது ஆகுமானதா? என்ற கண்ணோட்டத்தில் மட்டுமே ஃபத்வாவைக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த பித்அத் ( எனும் மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக ஏற்படுத்துவது) ஆகுமானது அல்ல ; மேலும் இந்த மார்க்கச் சட்டத்திற்கு எதிரானதாகும் என்று கூறினார்கள். இந்த ஃபத்வாவிற்கு பிறகும் பிரச்சனைக்குரிய இவ்விஷயத்தை தெளிவுபடுத்துவது அவசியம் ஆகும். ஆன்மாவிற்கு மனநிறைவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அல்லாமல் மண்ணறையை அழகுபடுத்தும் நோக்கத்துடன் மலர்களை அலங்கரிக்கலாமா? என்ற கேள்வி கேட்கப்படுகின்து.

எனவே இது தொடர்பாக எனக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டல் நினைவுக்கு வந்தது. அதில் இவ்விஷயத்தின் பக்கமும் ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது. அதனுடைய விவரம் இதுவாகும்:

1938-ம் ஆண்டில் இலண்டனில் இருந்து அன்பிற்குரிய மிர்ஸா அஸீஸ் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகன் ஸயீத் அஹ்மத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் பிரேத அடக்கப் பெட்டி கொண்டு வரப்பட்டது. அப்போது சிறுவர்கள் அடக்கம் செய்யப்படக் கூடிய மண்ணறையில் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த சமயத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் ஜனாஸாவுடன் மண்ணறைக்கு வந்தார்கள். அடக்கம் செய்து முடித்த பின் அங்கு வருகை தந்தவர்களில் ஒருவர் அழகு மற்றும் மரியாதை செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சில மலர்களை தூவி விட்டார். ஆனால், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அவரை தடுத்து விட்டார்கள். மேலும், இது ஆகுமானது அல்ல ; இவ்வாறே மார்க்கத்தில் புதுமையான பழக்கவழக்கங்கள் தோன்றுவதற்கான வழிகள் திறக்கப்படுகின்றன என்று (அல்லது அநேகமாக இது போன்ற வார்த்தைகளை) கூறினார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஃபத்வாவுடன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இந்த ஃபத்வாவும் இணைந்து ஒரு முழுமையான ஃபத்வா (அதாவது மார்க்கத் தீர்ப்பு) ஆகிவிட்டது. அதில் பிரச்சனைக்கான அனைத்து கண்ணோட்டமும் வந்து விட்டது. மேலும், உண்மையும் இதுதான். எந்தவொரு கபரின் மீதும் மலர் மாலைகளை அணவிப்பது வெளிப்படையில் ஒரு குற்றமற்ற விஷயமாக தென்படுகின்றது. இன்னும் கூறப்போனால் அதில் மரணித்தவரின் கண்ணியமும் இருப்பதாக தெரிகின்றது. ஆனால், நன்கு சிந்திக்கக் கூடிய மனிதனால் இதில் இரண்டு விதமான சீர்கேடுகள் ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதை உணர முடியும்.

(1) முதலாவதாக, இவ்வாறாக மெல்ல மெல்ல இணை வைத்தலுக்கான வழி திறக்கப்படுகிறது. மேலும் ஆரம்பத்தில் பொதுவாக மரியாதை நிமித்தமாக என்ற அடிப்படையில் துவங்கி இறுதியில் அசாதாரணமான மகத்துவமும், கண்ணியமும் அளிக்கப்படுகின்றது. வரம்புகளை மீறியவாறு பின்னர் கபரை வணங்கக் கூடிய நிலை வரை நிலைமை சென்று விடுகின்றது. எனவே இக்காலக்கட்டத்தில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கபர்களில் ஸஜ்தா செய்தவாறு தங்களுடைய மறுமைக்கான அழிவை தேடிக் கொள்கின்றனர். ஆனால், எந்த சான்றோர்களின் கபர்களில் ஸஜ்தா செய்யப்படுகிறதோ அதில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் அந்த நபர் இந்த வழிமுறையை ஒருபோதும் ஆமோதித்ததில்லை. மேலும், இதனுடைய முடிவும் சிறந்ததல்ல என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றார்கள். நம்முடைய எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் போதை ஏற்படுத்தும் பொருட்கள் தொடர்பாக எத்தகு ஞானமிக்க வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள் என்பதை பாருங்கள்!

அன்னார் (ஸல்) கூறுகின்றார்கள்:

எந்த பொருள் அதிக அளவில் போதையை உண்டாக்குமோ அதனுடைய சிறிய அளவும் ஹராமாகும். (விலக்கப்பட்டது ஆகும்).

இந்த நுட்பமான வழிகாட்டலில் உள்ள ஞானம் என்னவென்றால், சில விஷயங்களின் ஆரம்பம் வெளிப்படையில் சிறியதாகவும், சாதாரணமானதாகவும், முற்றிலும் குற்றமற்றத் தன்மையைக் கொண்டதுமாகவும் காணப்படுகின்றது. ஆனால், அதனுடைய முடிவு அழிவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. மனிதன் பலவீனமான இயல்புடையவனாக இருக்கின்றான். ஒரு சிறிய விஷயத்தை ஆரம்பித்து விட்டு முன்னேற்றத்தை நோக்கி கவனம் செலுத்திக் கொண்டே செல்வான். இதனால் தான் மார்க்கச் சட்டமானது முழுமையான மதிநுட்பத்துடன் வெளிப்படையாக குற்றமற்றதாக தென்படுகின்ற அந்தப் பகுதியை வேருடன் களை எடுப்பதுடன் சாத்தியமான அனைத்து விதமான தடுமாற்றங்களில் இருந்தும் மக்கள் தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தடுத்தும் விட்டது. எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய மரணத் தருவாயில் என் மரணத்திற்குப் பின் என்னுடைய மண்ணறையைத் ஸஜ்தா செய்யும் இடமாக ஆக்கி விடாதீர்கள் என்று கூறினார்கள். அன்னாருடைய ஸஹாபா பெருமக்கள் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்பதை அன்னார் (ஸல்) அறிந்து இருந்தாலும் பின்னால் வரக் கூடிய அபாயத்தை கருத்தில் கொண்டே இவ்வாறு கூறியுள்ளார்கள்.

இந்த வழிகாட்டலில் கூறப்பட்ட இந்த இரண்டாவது உளவியல் கருத்து என்னவென்றால், மரணிக்க் கூடியவர் இறைவனுடைய அருளால் நேர்மையானவரும், சொர்க்கவாசியாகவும் இருப்பார் என்றால், அவருடைய கபரில் மலர்களை அணிவிப்பதில் எந்த ஓர் உண்மைத்துவமும் இல்லை. ஏனெனில், எந்த ஆன்மா சொர்க்கத்தை அடைந்து விடுகிறதோ சொர்க்கத்தில் ஒப்பற்ற அருட்களில் நுழைந்து விடுகிறதோ அல்லது குறைந்தபட்சம் அந்த வழியை சென்றடைகின்றதோ அப்படிப்பட்ட ஆன்மாவிற்கு இந்த பூமியில் உள்ள மலர்களால் என்ன நேர்ந்து விடப் போகிறது? இன்னும் கூறப்போனால், அந்த ஆன்மா சொர்க்கத்தில் கிடைத்த மலர்களை ஒப்பிடும்போது இந்த மலர்களை அவமானச் சின்னமாக கருதும். மறுபுறம் மரணித்தவர் (இறைவன் அவ்வாறு நாடாமல் இருக்கட்டுமாக!) நரகவாசியாக இருப்பாரேயானால், அந்த மலரினால் அவருக்கு எந்தவொரு பயனும் இல்லை. இன்னும் கூறுவதாயின் என்னுடைய உற்றார் உறவினர்கள், என்னுடைய சந்ததிகள் என்னை ஏளனம் செய்கின்றனர்! நானோ நரகத்தின் நெருப்பில் எரிந்து கொண்டிருக்கின்றேன்; அவ்வாறிருக்க இவர்கள் என் மீது மலர்களை தூவுகின்றனரே! என்று அவருடைய ஆன்மா புலம்பும். எனவே இந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் கபர்களின் மீது மலர் மாலை அணிவிப்பது அல்லது மலரை தூவுவது பித்அத் (மார்க்கத்தில் இல்லாத புதுமை) ஆகும். அதனால் எந்த பயனும் இல்லை. அது முற்றிலும் இழப்பிற்குரியதே! ஏனெனில், ஒருபுறம் மரணித்தவர்களுக்கு அது துன்பத்திற்கான காரணியாக அமைகின்றது. மறுபுறம் அவ்வாறு செய்வது இணை வைத்தலுக்கான வழியை திறக்கின்றது. இதன் காரணமாகத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஆரம்ப காலகட்டத்திலும் தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய காலத்திலும் எந்தவொரு நம்பிக்கையாளரும் ஒருபோதும் இவ்வாறான விஷயத்தை செய்ததில்லை.

இஸ்லாத்தில் கபருக்கென்று செலுத்தக் கூடிய கண்ணியத்தை செலுத்த வேண்டும் என்ற கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்கள் இருக்கின்றன என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. அதன் மீது அமர்வது அல்லது காலை வைப்பது போன்ற விஷயங்கள் தடுக்கப்பட்டுள்ளன. தூய்மையாகவும், சுத்தமாகவும், நேர்த்தியாகவும் வைக்க வேண்டும். இவை அனைத்தும் கண்ணியத்திற்கு உட்பட்டதாகும். இதன் மூலம் மரணிப்பவர்கள் ஏளனத்திற்கும், இழிவுகளுக்கும் ஆளாகக் கூடாது; மேலும், அவர்களுடைய உற்றார், உறவினர்களின்

தொடர்ச்சி 15-ம் பக்கம்......

# ஜுமுஆ பேருரை

**உஹது போரின்போது ஸய்யதுஷ் ஷுஹதா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உயிர்தியாகம் மேலும் அந்தப் போரில் நிகழ்ந்த ஏனைய சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள் மற்றும் அநீதியிழைக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்வதற்கான வழிகாட்டல்**

இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் துயரம் ஏற்பட்டது; மேலும் இந்த துயரம் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களின் படையினரின் தவறால் ஏற்பட்டது. எனினும், ஒரு மகத்தான நன்மையும் கிடைத்தது. அதாவது, நயவஞ்சகர்களின் நயவஞ்சகமும், யூதர்களின் பகைமையும், உள்ளத்திலிருந்த காழ்ப்புணர்ச்சியும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மேலும், தூய முஸ்லிம்கள் தனித்தன்மை வாய்ந்தவர்களாக ஆகிவிட்டனர்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது அன்னாருக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது. அறிவிப்பில் வருகின்றது: ஹம்ஸாவை கொலை செய்தவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்தபோது, அன்னார் அவரை மன்னித்து விட்டார்கள்தான். எனினும், வஹ்ஷீ என் முன்னால் வரவேண்டாம் என்று ஹம்ஸாவின் மீதான நேசத்திற்கு மரியாதை செலுத்தியவாறு அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும், அல்லாஹ் ஹம்ஸாவின் சதையை சிறிதளவு சுவைப்பதிலிருந்தும் நெருப்பை நிரந்தரமாக ஹராமாக்கி விட்டான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் சிங்கம் என ஏழு வானங்களிலும் எழுதப்பட்டுள்ளது என்று ஜிப்ராயீல் (அலை) தமக்கு தகவல் தந்துள்ளதாக ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்.

காஸா ஷஹீத் மதிப்பிற்குரிய ஷேக் அஹ்மத் ஹுஸைன் அபூ ஸர்தானா ஸாஹிப் மற்றும் கென்யாவின் மதிப்பிற்குரிய உஸ்மான் அஹ்மத் காகோரியா ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 டிசம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **22ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அவருக்கு அருகில் சென்றார்கள். அவருக்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது. வீரம் மிக்க பொறுமைசாலி சிறிது நேரம் கண்ணீரால் இறுதி மரியாதை செலுத்தினார்.

பிறகு, எழுந்து நின்று தம் மகனிடம் கூறினார்: நான் என் சகோதரருக்காக இரண்டு போர்வைகள் கொண்டு வந்துள்ளேன்- நான் ஏற்கனவே கூறியது போன்று - அவர் ஷஹீதான செய்தி எனக்கு கிடைத்து விட்டிருந்தது. எனவே தான் கொண்டு வந்திருந்தேன். நீ இந்தத் துணிகளில் அவரை நல்லடக்கம் செய்து விடு.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நாங்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு அந்த இரண்டு துணிகளில் கஃபனிடலான போது அவர்களுக்கு அருகில் ஓர் அன்ஸாரி ஷஹீதாகி இருப்பதைப் பார்த்தோம். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்டது போன்றே அவருடனும் நடந்து கொள்ளப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு இரண்டு துணிகளில் கஃபனிட்டு விட்டு இந்த அன்ஸாரிக்கு ஒரு துணி கூட கிடைக்காமல் போவதை நினைத்து எங்களுக்கு வெட்கம் ஏற்பட்டது. எனவே ஒரு துணியில் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கும் மற்றொரு துணியில் அந்த அன்ஸாரி ஸஹாபி (ரலி) அவர்களுக்கும் கஃபனிடுவதற்காக நாங்கள் முடிவு செய்தோம். கணித்துப் பார்த்தபோது இருவரில் ஒருவர் சற்று உயரமானவராக இருப்பது தெரிய வந்தது. நாங்கள் எழுதி குலுக்கி போட்டோம். அதில் யார் பெயருக்கு எந்தத் துணி வந்ததோ அவரை அதே கஃபனில் நல்லடக்கம் செய்து விட்டோம்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் காஃபிர்களின் படையைக் கலக்கமடைந்திருக்கக் கண்டு படையின் மையத்தில் நுழைந்து விட்டார்கள். ஒருவகையில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்து விட்டிருந்தது. அப்பொழுது அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களுடன் இருந்தவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையை மறந்து போர் செல்வத்தைப் பெற குன்றை விட்டு கீழே இறங்கி சென்றார்கள். குன்றை காலியாக இருக்கக் கண்ட எதிரிகள் குதிரை வீரர்களைத் திரட்டி இஸ்லாமியப் படையின் பின்புறம் வந்து குதித்தார்கள். மாபெரும் போர் நடந்தது. ஹஸ்ரத் அமீர் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களும் ஷஹீது ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸித்தீக் (ரலி) அவர்கள் ஆகியோரும் காயமடைந்தார்கள். அபூஸுஃப்யானின் மனைவியான ஹிந்த பின்த் உத்பா அமீர் ஹம்ஸா (ரலி) அவர்களின் கல்லீரலைக் கிழித்து மென்றார். கொல்லப்பட்ட முஸ்லிம்களின் முகத்தை சிதைத்து அதாவது காதுகளையும், மூக்கையும் அதை மாலையாக ஆக்கிக் கழுத்தில் அணிந்து கொண்டனர். ஷஹீது ஆனவர்களின் உடல்களுடன் செய்யப்பட்ட இந்த அவமரியாதைகளைக் கண்டு முஸ்லிம்களின் கண்களில் ரத்தம் வழிந்தது. எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு உருக்கம் ஏற்பட்டது என்றால், அன்னாரும் இப்பொழுது உங்களுக்கு வெற்றி கிடைத்ததும் நீங்களும் நிராகரிப்பாளர்களின் உடல்களோடு இவ்வாறே நடந்து கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

எனவே தமது அன்பிற்குரியவரான உயிரை அர்ப்பணித்த சிறிய தந்தையாரான அமீர் ஹம்ஸா (ரலி) அவர்களைப் பார்த்துக் கூறினார்கள்:

உமக்குப் பகரமாக நான் அவர்களின் 70 பெயரின் உடலை சிதைப்பேன். ஆனால், அப்போது கீழ்வரும் வசனம் இறங்கியதும் இயல்பின் கருணையும், இயற்கையான மென்மையும் தற்காலிக மனித கோபத்தின் மீது மேலோங்கி விட்டது.

وَاِنْ عَاقَبْتُمْ فَعَاقِبُوْا بِمِثْلِ مَا
عُوْقِبْتُمْ بِهٖ ۗ وَلَئِنْ صَبَرْتُمْ لَهُوَ
خَيْرٌ لِّلصّٰبِرِيْنَ ﴿۱۲۷﴾

அதுபோன்ற சந்தர்ப்ப சூழ்நிலையில் இந்தப் பொறுமை ஸுப்ஹானல்லாஹ்!

وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ ﴿۱۰۸﴾

என்பது எவ்வளவு உண்மை! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக இருப்பதை இதில் அன்னார் (ரலி) விளக்கிக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த நாளில் இருந்து, சடலங்களைக் கெடுப்பது மற்றும் அவற்றை சிதைக்கும் அருவருப்பான சம்பிரதாயம் அடுத்த காலத்தில் எல்லா சமுதாயங்களிலும் தொடர்ந்தது. அது முஸ்லிம்களிடம் முழுவதுமாக ஹராம் ஆகிவிட்டது. அந்தப் பெருமை இஸ்லாத்திற்கு மட்டுமே கிடைத்துள்ளது.

அந்தப் போரில் முஸ்லிம்களுக்கு எப்படிப்பட்ட பெருந் துயரம் ஏற்பட்டது என்றால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களின் போர் வீரர்களின் தவறினால் இந்தப் பெரும் துயரம் ஏற்பட்டது. நயவஞ்சகர்களின் நயவஞ்சகம் யூதர்களின் காழ்ப்புணர்ச்சி மற்றும் உள்ளப் பகைமை வெட்ட வெளிச்சமாகி விட்டது. கலப்பற்ற முஸ்லிம்கள் தனியாகத் தெரிந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கடுமையான எதிரிகளில் ஒருவராக ஹிந்தா இருந்தார். உருதுவில் ஹிந்தா என்று கூறுவார்கள். உண்மையில், இவர் பெயர் ஹிந்த் ஆகும். அவர் எவ்வளவு கடுமையான எதிரியாக இருந்தார் என்றால், உஹது போர் சந்தர்ப்பத்தில் மக்களைக் கவிதைகள் பாடி, பாடி செல்லுங்கள்! இஸ்லாமியப் படை மீது தாக்குதல் தொடுங்கள் என்று தூண்டி விட்டுக் கொண்டிருந்தார்.

முஸ்லிம்களுக்கு ஒரு பயங்கரமான சந்தர்ப்பம் வந்தபொழுது இந்தப் பெண் எவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரான ஹஸ்ரத் ஹம்ஸாவின் கல்லீரலை எடுத்து என்னிடம் கொண்டு வருவாரோ அதேபோன்று அவர்களுடைய மூக்கு மற்றும் காதுகளை அறுத்து என்னிடம் கொண்டு வருவாரோ அவருக்கு நான் பரிசளிப்பேன் என்று கூறினார்.

ஆக, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலத்துடன் இவ்வாறே நடந்து கொள்ளப்பட்டது. போருக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அன்னாரது சிறிய தந்தையாருடன் இப்படிப்பட்ட அவமரியாதை செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தபோது, இயல்பாகவே அன்னாருக்கு துன்பம் ஏற்பட்டது.

அன்னார் கூறினார்கள்: எதிரிகள் இதுபோன்ற அநியாயமான முறையில் நடந்து கொள்வதைத் துவக்கி வைத்து விட்ட பிறகு, நானும் அவர்களோடு இவ்வாறே நடந்து கொள்வேன். அப்பொழுது எல்லாம் வல்ல அல்லாஹ் தரப்பிலிருந்து அன்னாருக்கு இவ்வாறு இறையறிவிப்பு வந்தது; அவர்களுடைய இந்த அநீதியான நடைமுறைக்குப் பிறகும் தாங்கள் ஒருபோதும், இதுபோன்ற எந்த ஓர் அடியையும் எடுத்து வைக்கக் கூடாது. அவர்களை மன்னித்து விட வேண்டும்.

போர் பற்றிய மீத விவரம் இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ். நான் பாலஸ்தீனத்து மக்களுக்காக துஆக்கள் செய்யவும் கூறிக் கொண்டே இருக்கிறேன். துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உலகத்துக்கு அநீதிக்கு எதிராக உண்மையான அமலை வெளிப்படுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக.

குரல்களோ சற்று உயரத் துவங்கியுள்ளனதான். அநீதி இழைக்கப்படுகிறது அநிதி இழைக்கப்படுகிறது என்று பேசவும் செய்கிறார்கள்தான். ஆனால், எல்லாரும் இஸ்ரவேல் அரசாங்கத்தைப் பார்த்து அஞ்சுவதாகத் தெரிகிறது அல்லது இயல்பாகவே இந்த மேற்கத்திய உலகம் முஸ்லிம்களுக்கு எதிரானது. இருக்கும் வெறுப்பின் காரணமாக இவர்கள் முஸ்லிம்கள் மீது ஒன்று அநீதி முடிவடையக் கூடாது என்றோ அல்லது எப்படி முயற்சி செய்யப்பட வேண்டுமோ அப்படி செய்ய வேண்டாம் என்றோ அவர்கள விரும்புகிறார்கள்.

அப்பாவிக் குழந்தைகள் ஆயிற்றே! பாவப்பட்ட பெண்கள் ஆயிற்றே! அவர்கள் மீது அநீதியிழைக்கப்படுகிறதே! முதியவர்கள் இருக்கிறார்களே! என்று அவர்கள் பார்ப்பதில்லை. ஆக, எவ்வாறு இருப்பினும், இவர்கள் மீதோ நாம் அதிகம் நம்பிக்கை வைக்க முடியாது. ஆனால், எந்நிலையிலும் நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். அவர்களுக்குப் புரிய வைத்துக் கொண்டே இருக்கவும் வேண்டும். துஆவும் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்கள் நாடுகளுக்கே தங்களுடைய குரல்களில் வலுவை ஏற்படுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! உண்மையில், ஒன்றாகி இந்த அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்புவார்களாக! இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வார்களாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா; ஒன்று அல்ல மாறாக, இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா இஸ்ரேலின் காஸா பகுதியில் வாழ்ந்து வந்த மதிப்பிற்குரிய ஷேக் அஹ்மத் ஹுஸைன் அபூ ஸர்தானா ஸாஹிப் அவர்களுடையது. அவர்களைப் பற்றி முஹம்மது ஷரீஃப் ஓதே ஸாஹிப் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: கடந்த நாட்களில் காஸாவில் நடைபெற்ற இஸ்ரேலிய குண்டு வீச்சில் நம்முடைய இந்த அஹ்மதி சான்றோரான ஷேக் அஹ்மத் ஹுஸைன் அபூ ஸர்தானா ஸாஹிப் ஷஹீது ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஷேக் அஹ்மத் அபூ ஸர்தானா ஸாஹிப் அவர்களுக்கு ஏறத்தாழ 94 வயது இருந்தது. இவர்கள் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலிருந்து தேர்ச்சி பெற்ற அறிஞர்களில் ஒருவர் ஆவார்கள். 1970-ல் இவர்கள் தம்முடைய சில நண்பர்களுடன் ஹாயிஃபா எனும் இடத்திற்குச் சென்றார்கள். அன்று பெருநாளாக இருந்தது. இறைவனின் நியதியின் கீழ் மர்ஹூம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கக் கூடிய போரில் கஸாவில் ஷஹீது ஆன முதல் அஹ்மதி ஆவார்கள். ஷேக் அஹ்மத் ஸாஹிப் பெருநாள் தொழுகைக்காக தம்முடைய நண்பர்களுடன் கபாபீரைச் சென்றடைந்தார்கள்.

இயக்கத்தின் முபல்லிஃக் ஆன மர்ஹூம் மவ்லானா பஷீருத்தீன் உபைதுல்லாஹ் ஸாஹிப் பெருநாள் குத்பா ஆற்றும்போது இமாம் மஹ்தியின் தோற்றம் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதனால் மர்ஹூம் ஷேக் ஸர்தனா ஸாஹிப் அவர்களின் ஆர்வம் அதிகரித்து விட்டது. அவர்கள் உடன் அமர்ந்திருந்த அஹ்மதி அலாவுத்தீன் ஓதே ஸாஹிப் அவர்களிடம் மவ்லானா பஷீருத்தீன் உபைதுல்லாஹ் அவர்களுடன் எனக்குப் பெரிய சந்திப்பை ஏற்படுத்தி தாருங்கள் என்று கூறினார்கள்.

உனக்கு உன் வாழ்வில் இமாம் மஹ்தியின் வருகை பற்றிய செய்தி கிடைத்து விட்டால் கண்டிப்பாக பைஅத் செய்து விடு என்று எனக்கு என் தந்தையார் மர்ஹூம் அவர்கள் அறிவுரை கூறியுள்ளார்கள் என்று உரையாடும்போது இவர்கள் மவ்லானா ஸாஹிப் அவர்களிடம் கூறினார்கள். எனவே அன்றைய தினமே மதிப்பிற்குரிய ஷேக் அஹ்மத் அபூ ஸர்தானா ஸாஹிப் அவர்கள் பைஅத் செய்து விட்டார்கள். அவர்கள் பைஅத் செய்வதைக் கண்ட அவர்களுடைய சில நண்பர்களும் பைஅத் செய்து விட்டார்கள். மர்ஹூம் தமது பகுதியில் ஒரு கண்ணியத்திற்குரிய அறிஞராக எல்லாருக்கும் பிடித்த நபராக இருந்தார்கள். இவர்களுக்கு சந்ததி கிடையாது. ஆனாலும், இவர்களுடைய அன்பர்களில் சில தூய்மையான அஹ்மதிகள் இருக்கின்றார்கள். பைஅத் செய்த பிறகு மர்ஹூம் வாய்ப்புக்கு ஏற்ப கபாபீருக்கும் சென்று வந்தார்கள். கபாபீரின் அஹ்மதிகளுடன் தொடர்பில் இருந்தார்கள்.

கிலாஃபத்தை மிகவும் நேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். இவர்கள் தாம் உண்மையான அஹ்மதி என்பதைப் பலமுறை வெளிப்படுத்தியுள்ளார்கள். திருக்குர்ஆனுடன் அசாதாரணமான இணைப்பு இருந்தது. பொதுவாக ஒவ்வொரு வாரத்திலும் ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். அவர்கள் எனக்கு அனுப்பிய பதிவு செய்யப்பட்ட (ஒளிப்பதிவு) தூதுச் செய்தியிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலஸ்தீன முன்னாள் தலைமை நீதிபதியான ஷேக் முஹம்மது ஹூஸைன் அபூஸர்தானா, மர்ஹூம் அஹ்மத் அபூ ஸர்தானா ஸாஹிப் அவர்களின் சகோதரர் ஆவார். மர்ஹூமின் துணைவியார், அதாவது இரண்டாவது மனைவி அவர்களும் இந்த விபத்தில் காயம் அடைந்துள்ளார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு குணமளிப்பானாக!

டாக்டர் ஹஃபீஸ் ஸாஹிப் இங்கிருந்து மனிதம் முதலில் அமைப்பின் கீழ் அங்கு சென்று வந்தார்கள். அங்கு அவர்களுக்கு அபூ ஸர்தானா ஸாஹிப் அவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் கூறினார்கள்: நான் அவர்களை சந்திக்க சென்றபோது அவர்கள் எனக்கு மரியாதை கொடுப்பதற்காக எழுந்திருக்க முயற்சி செய்தார்கள். அப்பொழுது நான் அவர்களிடம் அமர்ந்தே இருங்கள் என்று கூறினேன். மிகவும் உணர்ச்சி பெருக்கில் ஆகிவிட்டார்கள்.

மேலும், தமது தடியால் சற்று லேசாக தொட்டு, அவர்களிடம் நீங்கள் காலத்தின் கலீஃபா அவர்களின் பிரதிநிதி ஆவீர்கள். என் முன் நின்று கொண்டிருக்கிறீர்கள். நான் எப்படி உட்கார்ந்திருக்க முடியும்? என்று கேட்டார்கள். கிலாஃபத்துக்குப் பெரிதும் கண்ணியமும், மரியாதையும் அளித்து வந்தார்கள்.

பிறகு, அவர்கள் கையைப் பிடித்தார்கள். மேலும், கூறினார்கள்: நீங்கள்

எந்த நாட்டைச் சேர்ந்தவரோ அங்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்திருந்தார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் கிலாஃபத் ஆகியவற்றிற்காக இவர்களது நேசம் எந்த அளவு இருந்தது என்றால் இவர்களைப் பார்த்து நானும் கண்ணீர் வடிக்க ஆரம்பித்து விட்டேன் என்று கூறினார்கள்.

பிறகு, இவர்கள் டாக்டர் ஸாஹிப் அவர்கள் மூலமாக மொபைலில் என் பெயருக்கு தமது ஒரு தூதுச் செய்தியையும் அனுப்பினார்கள். நான் பதிவு செய்ய விரும்புகிறேன் என்று கூறினார்கள்.அந்தத் தூதுச் செய்தி வைரல் ஆகிவிட்டது. அதன் ஒரு பகுதியை நான் வாசித்தும் காட்டி விடுகிறேன். இவர்கள் என் பெயருக்கு அனுப்பிய அந்தத் தூதுச் செய்தியில் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி பகர்கிறேன். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும். நான் ஒவ்வொரு வாரமும் ஒருமுறை திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்கிறேன். ஃபஜ்ர் வேளையில் நான் தங்களுக்காக துஆ செய்கிறேன். என் கலீஃபா அவர்களே! எனக்கு உதவி புரியுங்கள்; என்னை காப்பாற்றுங்கள். நான் சிரமத்தில் ஆன்மிக இன்னலில் மற்றும் கவலையில் இருக்கின்றேன்.

பிறகு கூறுகிறார்கள்: உலகத்துக்கு உண்மையைத் தவிர வேறு என்ன வேண்டும்? பிறகு கூறுகிறார்கள்: நான் தங்களுடைய ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றுகிறேன். மேற்கொண்டு கூறுகிறார்கள்: உலகத்துக்கு உண்மையைத் தவிர வேறு என்ன வேண்டும்? இங்கு அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வது மிகவும் சிரமமாகும். ஆனால், நான் அதற்காக முழு மனவுறுதி கொண்டுள்ளேன்.

நான் 1948-ல் நடந்த போரில் 48 வயதில் பங்கு பெற்றேன். நான் மூன்று எல்லைப் போர்களில் கமாண்டராக தொண்டாற்றியுள்ளேன். வீட்டையும் இழந்தேன். என் தந்தையார் ஒரு புகழ் பெற்ற சூஃபியாக இருந்தார்கள். என் சகோதரர் முஹம்மது இங்கு காஸாவின் தலைமை நீதிபதியாக இருந்தார்கள். எனது வம்சத்தில் எனக்குத் தொந்தரவு கொடுக்கும் நபர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய நேர்வழி மற்றும் சீர்திருத்தத்துக்காக எனக்காக துஆ செய்யுங்கள்.

பிறகு கூறுகிறார்கள்: இந்த மாவட்டத்தில் என்னிடம் சில தோழர்களே இருந்தார்கள். பிறகு, இவர்கள் எனக்கு மகன்களைப் போன்று நேசத்திற்குரியவர்கள் என்று சிலருடைய பெயர்களைக் கூறியுள்ளார்கள். அவர்களில் ஓர் இளைஞர் தாரிக் அபூதே ஸாஹிப் அவர்கள் ஆவார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு சந்ததிகள் எதுவும் இல்லை.

பிறகு, மேற்கொண்டு துஆ செய்யுமாறு கூறுகிறார்கள்: எல்லாம் வல்ல அல்லாஹ் தங்களுக்கு பரக்கத் வழங்குவானாக. நான் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கியாமத் நாள் வரை எல்லாம் வல்ல அல்லாஹ்வை சந்திக்கும் வரை தாங்கள் எனது பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நான் தங்களுக்கு உறுதியளிக்கிறேன். அதாவது, நான் எனது பைஅத்தைப் புதுப்பிக்கின்றேன். மேலும், நான் உண்மையான உள்ளத்துடன் அஹ்மதி ஆவேன் என்று உறுதியளிக்கிறேன்.

பிறகு, இவர்கள் கூறுகிறார்கள்: அஹ்மதிய்யா கொள்கையைத் தவிர எனக்கு வேறு எந்தக் கொள்கையும் இல்லை. சில எதிரிகள் இவர்கள் அஹ்மதி ஒன்றும் கிடையாது; வெறுமனே அஹ்மதிகள் கிளப்பி விடுகிறார்கள் என்று கூறினார்கள். ஆனால், இவர்களுடைய பதிவு செய்யப்பட்ட அறிக்கை முன்னால் இருக்கிறது. இதற்குப் பிறகு அந்த எதிரிகள் வாயை அடைத்திருப்பார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களின் படித்தரத்தை உயர்த்துவானாக. இவர்களின் துணைவியாருக்கும் குணமளிப்பானாக. எல்லாம் வல்ல அல்லாஹ் பாலஸ்தீனர்களுக்காக இவர்கள் செய்த துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக. அங்கு அமைதியையும் நிலவச் செய்வானாக! அந்த மக்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும் ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக

இரண்டாவது ஜனாஸா கென்யாவைச் சேர்ந்த உஸ்மான் அஹ்மத் காகோரியா ஸாஹிப் அவர்களுடையது. இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களுடைய ஜமாஅத் தொண்டின் தொடர் மிகவும் நீளமானது. பல பத்தாண்டுகளில் பரவியுள்ளது. 1932 -இல் இவர்கள் பிறந்தார்கள். 60 களில் இவர்களுக்கு ஜமாஅத்துடன் அறிமுகம் ஏற்பட்டது. ஒரு பழைய அரேபிய அஹ்மதி சான்றோர் மர்ஹூம் ஸாலிம் அஃபீர் ஸாஹிப் அவர்கள் மூலமாக இவர்களுக்கு ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்தது. இதற்குப் பிறகு இவர்கள் ஜமாஅத்தின் முபல்லிஃக் ஆன மதிப்பிற்குரிய மவ்லானா ரோஷன் தீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக 1964 இல் பைஅத் செய்து, ஜமாஅத்தில் இணைந்தார்கள். இறுதி வரை அந்த பைஅத் உடன்படிக்கையை மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றினார்கள். கல்வி நிறுவனத்துடன் இணைந்திருந்தார்கள். இவ்வாறு மற்றொரு பாலிடெக்னிக் பள்ளியின் முதல் உள்ளூர் தலைமையாசிரியராக ஆவதற்கான கண்ணியமும் இவர்களுக்குக் கிடைத்தது. அதைப் பற்றி இவர்கள் பெரும்பாலும் கூறி வந்தார்கள். கல்வி நிறுவனத்தில் உயர்ப் பதவியில் இருக்கும்போதுதான் பணி ஓய்வு பெற்றார்கள். பல்வேறு ஜமாஅத் நூல்களை ஸவாஹீலீ மொழியில் மொழியாக்கம் செய்வதற்கான நற்பேற்றினை இவர்கள் பெற்றார்கள். நைரோபீ ஜமாஅத்தின் முதல் உள்ளூர் தலைவராக ஆவதற்கான கண்ணியமும் இவர்களுக்குக் கிடைக்கப் பெற்றது. இவ்வாறே, கென்யா ஜமாஅத்தின் முதல் உள்ளூர் மூஸீமார்களிலும் இவர்கள் கணக்கிடப்படுகிறார்கள்.

மர்ஹூம் பல உன்னதமான நற்பண்புகளுக்கு சொந்தக்காரரான ஒரு கொள்கை உடைய மனிதராக இருந்தார்கள். வயதின் இறுதி பகுதி வரை முறையாக தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். சந்தாக்கள் செலுத்துவதில் ஒருபோதும் கவனக் குறைவையோ அல்லது சோம்பேறித் தனத்தையோ காட்ட மாட்டார்கள்.

இவர்களுடைய உள்ளத்தில் தலைமையக முபல்லிஃக் மார்களுக்கு என மிகவும் மரியாதை இருந்தது. ஓர் அஹ்மதி யாரேனும் ஒரு தலைமையக முபல்லிஃக்கைப் பற்றி ஏதாவது தவறான விஷயத்தைப் பேசுகிறார் என்றால், உடனடியாக அவரைத் தடுத்து விடுவார்கள். இன்னும் சொல்வதாயின் கோபத்தையும், கடும் விருப்பமின்மையையும் வெளிப்படுத்துவார்கள். மேலும், எப்பொழுதும் இவ்வாறு அறிவுரை செய்வார்கள்:

பாருங்கள்! இன்று உங்களுக்கு ஈமானின் ஒளியை அவர்கள் தான் அறிமுகம் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறதே அது அவர்கள் காரணமாக கிடைத்தது. இல்லையென்றால், நீங்களோ அறிவீனத்தில் விழுந்து கிடந்தீர்கள். எனவே இது அவர்கள் உங்களுக்கு செய்த பேருதவியாகும். உங்கள் சந்ததிகளுக்கும் செய்த பேருதவியாகும். எனவே இதுபோன்ற விஷயங்களைப் பேசாதீர்கள். எவ்வாறு இருப்பினும், இவை இவர்களுடைய நல்லொழுக்கங்களாக இருந்தன.

நம்முடைய முபல்லிஃக்மார்களும், புதிதாக செல்லக்கூடியவர்களும் உள்ளூர் மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக ஆகும் அளவுக்கு இப்பொழுது தம்முடைய உயர்தரத்தையும் நிலைநாட்ட வேண்டும். இவ்வாறே, மர்ஹூம் அவர்களிடம் விருந்தோம்பல் பண்பும் மிக அதிகமாக இருந்தது. ஏறக்குறைய இவர்களுடைய சந்ததிகள் அனைவருமே ஜமாஅத்துடன் இணைந்துள்ளார்கள். ஏதாவது ஒரு வகையில் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பையும் பெறுகின்றனர். இவர்களின் ஒரு மகன் அப்துல் அஸீஸ் காகோரியா ஸாஹிப் அவர்கள் இப்பொழுது ஸத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் கென்யாவாக இருக்கிறார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் மர்ஹூம் அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி அவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக அவர்களுடைய சந்ததிகளுக்கும் அவர்களின் முன்மாதிரியின் படி நடப்பதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 15- 22 FEB 2024 Issue No. 7 & 8

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியைக் குறித்த முன்னறிவிப்பு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

بِاِلْهَامِ اللهِ تَعَالٰى وَاِعْلَامِهٖ عَزَّوَجَلّ

அடையாளங்களும், கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் முன்னறிவிப்பு)

அந்த மேன்மேலும் கருணை காட்டுபவனும், சிறப்பு மிக்கவனும், சான்றரன்மையும், மேன்மையும் கொண்டவனும் ஒவ்வொரு பொருளின் மீது ஆற்றல் படைத்தவனுமாகிய அந்த இறைவன் (جَلَّ شَانُهٗ وَعَزَّ اِسْمُهٗ)

(கம்பீரம் பொருந்திய பெயர் கொண்ட அந்த கண்ணிய மிக்க வல்லமையுள்ள இறைவன்) தனது இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்:

நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஒரு கருணனையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் எனது கருணையினால் அவை ஒப்புக் கொள்ளப்படுவதற்கான தகுதியை வழங்கினேன். ஹோஷியோர்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கிவிட்டேன். எனவே உமக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் வழங்கப்படுகின்றது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளமும் உமக்கு வழங்கப்படுகின்றது. மேலும், வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாகட்டுமாக!

இறைவன் இதை கூறினான்: ஏனெனில், வாழ்வை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வரவேண்டும்; இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்பட வேண்டும்; உண்மை அதன் அனைத்து அருட்களுடன் வரவேண்டும். மேலும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடி விடவேண்டும். மேலும், நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகின்றேனோ அதனை நான் செய்பவன் ஆவேன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் நான் உம்முடன் இருக்கின்றேன் என்று அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைத் தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் நிராகரிப்பு மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு தெளிவான அடையாளம் கிடைக்க வேண்டும். மேலும், குற்றவாளிகளின் வழி வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஓர் அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்தே தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சேர்ந்தவராகமே இருப்பார். அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டுள்ளது. அவர் உட்புற அசுத்தத்திலிருந்தும் தூய்மை அடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் உள்ளது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவ மிக்கவராகவும் செல்வம் படைத்தவராகவும் இருப்பார்.

அவர் உலகத்திற்கு வருவார். தமது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் அருட்களாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில், இறைவனின் கருணையும், அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவ மிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திக் கூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். பௌதீக மற்றும் ஆன்மிக ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். (இதன் பொருள் புரியவில்லை) திங்கட்கிழமை ; அருளுட்குரிய திங்கட்கிழமை. உமது நேசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவர் நற்பேறு கொண்டவர். مَظْهَرُ الْاَوَّلِ وَالْاٰخِرِ مَظْهَرُ الْحَقِّ وَالْعَلَاءِ كَاَنَّ اللهَ نَزَلَ مِنَ السَّمَآءِ

(அவரிடமிருந்து முதலும், இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்து உண்மையும், உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று இருக்கும்)

அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு காரணியாகவும் இருக்கும். ஒளி வருகின்றது; ஒளி. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் எமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருட்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَكَانَ اَمْرًا مَّقْضِيًّا۔ (இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.)

(மஜ்முஆஃ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 100, இஷ்திஹார்.பிப்ரவரி 20, 1886)

**National Watch Company**
**Sales & Service**




B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad